சத்துணவு
'ஜீவாகாரம்'
பக்கப் விலை 50/-
நான்கு மாதக் குழந்தைகளிலிருந்து கொடுக்கக் கூடியது
அண்ணா
தொழிலகம்
இணுவில்
(சி-9106

பக்கங்கள்: ஆறு
Registered as a Newspaper
# உதயன்
விலை ரூபா 5-00

அருந்துங்கள்!
அண்ணா கோப்பி
பாவித்த வெற்றுப் பைகளைக் கொடுத்து இனாம் பெற்றுக்கொள்ளுங்கள்.
அண்ணா
தொழிலகம்
இணுவில்
(சி-9106)

சுடர் 10 திருவள்ளுவர் ஆண்டு 2026 சித்திரை 31 ஞாயிற்றுக்கிழமை (14 - 05 - 1995) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 168

# 15க்கும் மேற்பட்ட படையினர் கொக்கட்டிச்சோலையில் பலி!

## புலிகளின் தாக்குதல்கள் கிழக்கில் தொடர்கின்றன

மட்டக்களப்பு, மே 14

மட்டக்களப்பு மாவட்டம் கொக்கட்டிச்சோலையில் நேற்று முன்தினம் காலை விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் 15க்கும் மேற்பட்ட படையினர் கொல்லப்பட்டனர்.

விடுதலைப் புலிகளின் முகாம் ஒன்றை முற்றுகையிடுவதற்காக வந்த 200க்கும் மேற்பட்ட படையினரே புலிகளின் தாக்குதலுக்கு உள்ளாகினர்.

படையினருக்கும் புலிகளுக்கும் இடையிலான மோதல் சுமார் ஒரு மணி நேரம் நீடித்தது. 15க்கும் மேற்பட்ட படையினர் கொல்லப்பட ஏனையோர் காயங்களுடன் தப்பி ஓடினர்

இதே தினம் மட்டக்களப்பு கடவத்தை ராணுவ முகாமைச் சேர்ந்த படையினர் மீதான மற்றொரு தாக்குதலில் 4 படையினர் பலியாகியது தெரிந்ததே.

கடந்த திங்கட்கிழமை அம்பாறை மாவட்டம் கஞ்சிகுடிச்சாறு அதிரடிப்படை முகாம் படையினர் மீதான தாக்குதலில் 19 சிப்பாய்கள் கொல்லப்

[6 ஆம் பக்கம் பார்க்க]

முச்சந்தி முரளி



அப்ப கிழக்கிலும் முகாம்களுக்குள் முடங்கப் போகினம் என்று சொல்லுங்கோ...!

## ஒளிந்திருந்த படையணி மீது புலிகள் திடீர் தாக்குதல்!

### முல்லைத்தீவில் சிப்பாய் பலி!!

யாழ்ப்பாணம், மே 14

முல்லைத்தீவு பகுதியில் பதுங்கியிருந்து தாக்குதல் நடத்த முற்பட்ட படையினர் மீது நேற்று முன்தினம் விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் சிப்பாய் ஒருவர் கொல்லப்பட்டார்.

தட்டிருப்புக்கும், பெரிய புலத்துக்கும் இடையே உள்ள பகுதியில் தாக்குதல் நடத்தும் நோக்கில் பதுங்கியிருந்த சுமார் நூறு பேர் கொண்ட படை அணி மீதே புலிகள் தாக்குதலை நடத்தினர்.

இத் தாக்குதலில் ஒரு சிப்பாய் கொல்லப்பட்டதும் ஏனையோர் தப்பி ஓடிவிட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

(ஐ-4)

## தவறுதலாக வெடித்த துப்பாக்கி

கொழும்பு, மே 14

ஊர்காவல் படை வீரர் ஒருவரின் துப்பாக்கி தவறுதலாக வெடித்தது.

இதனை அறிந்து கொள்ளாத பொலீஸார், புலிகள் தான் வந்து விட்டார்கள் என்ற அச்சத்தினால் தொடர்ந்து துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்தனர். இதனால் முழுக்கிராமமுமே பதற்றம் அடைந்தது.

அனுராதபுரம் எல்லைக் கிராமங்களில் ஒன்றான அட்டம்பகஸ்கட பகுதியில் கடந்த புதன் இரவு இச்சம்பவம் நிகழ்ந்தது. (இ)

## அனுராதபுரம் நகரில் பாதுகாப்பு அதிகரிப்பு

கொழும்பு, மே 14

வவுனியா — அனுராதபுரம் எல்லைக் கிராமங்களில் உள்ள பொலீஸ் காவலரண்கள் அண்மையில் விடுதலைப் புலிகளின் தாக்குதலுக்கு உள்ளானதை அடுத்து அனுராதபுரம் நகரில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

அனுராதபுரம் நகரின் பொதுச் சந்தைப் பகுதியிலும் பொது வைத்தியசாலையிலும் கடுமையான பாதுகாப்பு விதிகள் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றன.

அனுராதபுரம் பொது வைத்தியசாலையில் நோயாளரைப் பார்க்கச் செல்வோர் எண்ணிக்கை மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

அனுமதிப்பத்திரம் முறை அமுல் செய்யப்படுகிறது.

ஒரு நோயாளியை அனுமதிப்பத்திரத்துடன் இருவர் மட்டுமே பார்க்கச் செல்ல முடியும். (இ)

## இந்திய விமானப்படை உதவி இலங்கை அரசு நாடும்?

கொழும்பு, மே 14

வடக்கு கிழக்குப் பகுதிகளில் விடுதலைப் புலிகளின் முகாம்களைக் கண்காணிப்பதற்கு இந்திய விமானப்படையின் உதவி கிடைக்கக்கூடும்.

— இவ்வாறு ஏஜென்ஸி செய்தி ஒன்று தெரிவித்தது.

விடுதலைப் புலிகள் விமானப்படை விமானங்களைச் சுட்டு வீழ்த்தியதைத் தொடர்ந்து விமானப்படை நடவடிக்கைகள் முடங்கிப்போயிருப்பது தெரிந்ததே.

இந்நிலையில் —

ஏவுகணைகளை எதிர்கொள்ளக்கூடிய இந்திய விமானங்களின் உதவியுடன் வடக்கில் படை நடவடிக்கைகளைத் தொடர அரசு இந்தியாவின் உதவியை நாடலாம் என்று தெரிவிக்கப்படுகிறது. (ஐ-6)

## ரூபவாஹினி புதிய தலைவர்

கொழும்பு, மே 14

ஸ்ரீலங்கா ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தின் புதிய தலைவராக திரு. டி. ஈ. டபிள்யு. குணசேகர நியமிக்கப்பட்டுள்ளார். திரு குணசேகர ஏற்கனவே ஐ.ரி.என். ஒளிபரப்பு சேவையின் தலைவராகவும் இருந்து வருகிறார். (ஐ)

# புலிகளைக் கண்காணிக்க இந்தியக் கடற்படை உதவி

### பாக்குநீரிணையில் தீவிர ரோந்து

கொழும்பு, மே 14

பாக்கு நீரிணைப்பகுதியில் விடுதலைப் புலிகளின் கடற்புலிகள் நடமாட்டத்தை கண்காணிப்பதற்கு இந்திய கடற்படை தீவிர நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

விடுதலைப்புலிகளை எதிர்த்துப் போரிடுவதற்கு இலங்கை அரசு இந்தியாவிடம் கோரியிருந்த உதவிக்குப் பதிலாக பாக்குநீரிணை கடற்பகுதியில் கடற்படை கண்காணிப்பு நடவடிக்கைகளை அதிகரிக்க இந்திய அரசு முடிவு செய்துள்ளதாக இராணுவ வட்டாரங்களை மேற்கோள் காட்டி செய்தி ஏஜென்ஸிகள் தெரிவித்தன.

ஏற்கனவே இந்தியக் கடற்படையினர் பாக்குநீரிணையில் மேற்கொண்ட நடவடிக்கையினால் கடற்புலிகளின் நடவடிக்கைகள் தடைப்பட்டுள்ளன என்றும் அந்த வட்டாரங்களில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் கடற்புலிகளை முடக்குவதற்கு இந்தியக் கடற்படை முன்வந்திருப்பது குறித்து உத்தியோகபூர்வ தீர்மானங்கள் எதுவும் இதுவரை எந்தத் தரப்பில் இருந்தும் வெளியிடப்படவில்லை என்று செய்தி ஏஜென்ஸிகள் சுட்டிக்காட்டின. (ஐ-6)

## ரணில் - சந்திரிகா சந்தித்து பேச்சு

கொழும்பு, மே 14

நாட்டில் தற்போது எழுந்துள்ள சூழ்நிலை குறித்து ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா, எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்காவைச் சந்தித்து விரிவாகப் பேச்சு நடத்தினார்.

கடந்த செவ்வாயன்று இச் சந்திப்பு இடம்பெற்றது. [ஐ]

## விமானப்படையின் உதவி இன்றி படை நடவடிக்கை சாத்தியமல்ல

### இராணுவ ஆய்வாளர் கருத்து

கொழும்பு, மே 14

விமானப் படையினரின் உதவி இல்லாமல் வடக்கு கிழக்குப் பகுதியில் பாரிய இராணுவ நடவடிக்கை எதனையும் படையினர் மேற்கொள்ள முடியாது.

இராணுவ ஆய்வாளர் ஒருவர் கொழும்பில் இவ்வாறு கருத்துத் தெரிவித்துள்ளார்.

தரை வழியாக முன்னேறிச் செல்லும் படையினருக்கு ஆயுதங்கள், உணவு என்பனவற்றை விநியோகிக்கவும், எதிரியின் பலத்தைக் குறைக்கவும் விமானப் படையினரின் ஒத்துழைப்பு அவசியம்.

தற்போது பாதுகாப்புப் படையினரின் பலத்தைக் கொண்டு மட்டுப்படுத்தப்பட்ட இராணுவ நடவடிக்கைகளையே செய்யமுடியும்.

பாரிய இராணுவ நடவடிக்கைக்காக யுத்த விமானங்களைக் கொள்வனவு செய்வதற்காக இந்தியா, பாகிஸ்தான், ரஷ்யா, சீனா போன்ற நாடுகளுக்கு அதிகாரிகள் சென்றுள்ளனர்.

[6 ஆம் பக்கம் பார்க்க

## காட்டுப் புளியங்குளத்திலிருந்து சிங்களவர்கள் வெளியேற முயற்சி

### அனுராதபுரத்திலிருந்து மேலதிக படையினர்

கொழும்பு, மே 14

கடந்த புதன்கிழமை காட்டுப் புளியங்குளத்தில் புலிகளினால் நடத்தப்பட்ட தாக்குதலை அடுத்து அங்கு வாழும் சிங்கள மக்கள் பீதியினால் வெளியேற முயற்சித்து வருகின்றனர்.

இவர்கள் வெளியேறுவதைத் தவிர்க்கும் நோக்குடன் காட்டுப்புளியங்குளம் பகுதியில் படையினர் பாதுகாப்பை அதிகரித்துள்ளனர்.

அனுராதபுரத்தில் இருந்து மேலதிக பொலீஸாரும் படையினரும் காட்டுப்புளியங்குளத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

பொலீஸ் காவலரண்கள் மீது அண்மையில் இடம்பெற்ற தாக்குதல் சம்பவங்கள் காரணமாக வவுனியா — அனுராதபுரம் எல்லைக் கிராமங்களின் பாதுகாப்பும் பலப்படுத்தப்பட்டுள்ளது. [இ]

# புலிகளின் தாக்குதல்களை எதிர்கொள்ள படையினர் தயாராக இருந்து வருகின்றனர்

## இராணுவத் தளபதி ஜெரி டி சில்வா

கொழும்பு, மே 14

வடக்கில் உள்ள படையினரின் முகாம்கள் புலிகளால் சுற்றி வளைக்கப்பட்டுள்ளன என்றும் அவற்றின் மீதான தாக்குதல்கள் தவிர்க்க முடியாதவை என்றும் கடந்த சில நாட்களாக தெற்கில் பிரசாரங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. எந்த ஒரு தாக்குதலையும் எதிர்கொள்ள நாம் தயாராக உள்ளோம்.

இராணுவத் தளபதி ஜெரி டி சில்வா இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்துக்கு அளித்த பேட்டியில் மேற்கண்டவாறு கூறினார்.

பேட்டி விவரம் வருமாறு:-

★ கேள்வி: விடுதலைப்புலிகளுக்கும் அரசுக்கும் இடையே மூன்று மாதங்கள் 11 நாட்கள் நீடித்த மோதல் தவிர்ப்பு உடன்பாடு ஏப்ரல் 19 ஆம் திகதி விடுதலைப் புலிகளால் மீறப்பட்டது. அதனையடுத்து விடுதலைப் புலிகள் கடந்த மூன்று வாரங்களாக நடத்திய தாக்குதல்களில் உயிர்களும் தளபாடங்களும் அழிக்கப்பட்டுள்ளன. இலங்கை ராணுவம் இதற்கு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

★ ஜெரி:- விடுதலைப்புலிகளின் தாக்குதல்களுக்கு எல்லாம் நாம் பதிலடி கொடுத்துள்ளோம். எமது துருப்பினர் இந்த நடவடிக்கைகளை வெற்றிகரமாக நடத்தியுள்ளனர்.

எமது தரப்பில் ஏற்பட்ட சேதங்கள், இழப்புகள் விரிவாக வெளியிடப்பட்டபோதிலும் விடுதலைப்புலிகள் தரப்பில் ஏற்பட்ட சேதங்களை வெளியிடுவதில் பத்திரிகைகள் நேர்மையான முறையில் நடந்து கொள்ளவில்லை என்றே கருதுகிறேன்.



புலிகளின் தாக்குதல்கள் எல்லாம் மென் இலக்குகள் மீதே நடத்தப்பட்டுள்ளன. மென் இலக்குகள் என்பதை சற்று விளக்கிக் கூற விரும்புகின்றேன். சில தகவல்களை வைத்துக்கொண்டு, தொண்டர் படையினர் கடமையில் உள்ள நிலைகளுக்கு அவர்கள் செல்கின்றனர். நிரந்தர இராணுவத்துக்கும் சிறந்த முறையில் அதிரடிப்படை, பொலீஸ் ஆகியவற்றின் பாதுகாப்புகள் வழங்கப்படவில்லை.

எனவே துருப்பினர் வசதியீனமான நிலையில் இருந்துகொண்டே எதிர்த் தாக்குதல்களை நடத்தியுள்ளனர்.

★ கேள்வி: ... வடக்கு கிழக்கில் உள்ள பல இராணுவ முகாம்களில் விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதல்களை எதிர்த்து சமாளிக்க உங்களால் முடிந்தது என்று கூறுகிறீர்களா?

★ ஜெரி: ஆம்! விடுதலைப் புலிகளிடம் ஆச்சரியப்படக் கூடிய சாதகமான சூழ்நிலைகள் பல இருந்தன. இடம், நேரம், இலக்கு என்பவற்றைத் தேர்ந்தெடுப்பதில் இந்த சாதகமான சூழ்நிலை தங்கியுள்ளது.

சிறிய முகாம்கள் மீது அவர்கள் பெரிய தொகையில் வந்து தாக்குதல்களை நடத்தியுள்ளனர். அந்த முகாம்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளதால் மேலதிக படையினரை அனுப்பும் சாத்தியக்கூறு குறைவாக உள்ளது

இவ்வளவு வசதியீனங்களுக்கு மத்தியில் எமது துருப்பி

(6 ஆம் பக்கம் பார்க்க)

## கடற்படைத் தளம் திருமலையில் விஸ்தரிப்பு

### தமிழ்க் குடும்பங்கள் வெளியேற்றம்

திருகோணமலை, மே 14

திருகோணமலை கடற்படைத்தள விஸ்தரிப்புக்காக அதற்கு அருகேயுள்ள தமிழ் கிராமங்களிலிருந்து தமிழர்கள் வெளியேற்றப்பட்டு வருகிறார்கள்.

கடற்படைத் தளத்துக்கு அருகேயுள்ள மனையாவெளி கிராமத்தில் வாழும் 13 தமிழ்க் குடும்பங்களை அங்கிருந்து வெளியேற உத்தரவிடப்பட்டுள்ளது.

இந்த 13 குடும்பங்களும் மீனவக் குடும்பங்களாகும்.

அக்கிராமத்தில் வாழும் சிங்கள மற்றும் முஸ்லிம் குடும்பங்கள் அக்கிராமத்திலேயே தொடர்ந்து வாழ அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த 13 தமிழ் குடும்பங்கள் வாழ்ந்த வீடுகள் யாவும் முற்றாக அழிக்கப்பட்டுள்ளன.

இதற்கிடையில் குச்சவெளியில் மீளக் குடியமர்ந்த 97 தமிழ்க் குடும்பங்கள் படையினரின் அச்சுறுத்தல் காரணமாக மீண்டும் அகதி முகாமுக்குச் சென்றுள்ளனர் (இ-4)

## மிதிவெடியில் சிப்பாய் கால் இழப்பு

யாழ்ப்பாணம், மே 14

ஏறாவூர் மைலம்பா வெளியில் இராணுவச் சிப்பாய் ஒருவர் மிதிவெடியில் சிக்கி காலை இழந்துள்ளார்.

சென்ற வியாழக்கிழமை காலை மைலம்பா வெளி ரயில் பாதை அருகே இச்சம்பவம் நிகழ்ந்தது. (இ-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவாயநம
''நாமந்தனை ஓதி நாளும் நலம் பெறுவோம்''

# சிவஞானச் செம்மலுக்கு சிறப்பு விழா



அருளிசைச் செல்வர், பண்ணிசைப்புலவர்,
பத்திரத்தினம், பண்ணிசை மாமணி,
அருளிசை மாமணி, தேனருவி, திருவாசகம்

## திரு. வேலுப்பிள்ளை சிவஞானம்

அவர்கள்

அவமாயை கொண்டுலகில் அலைந்திடாது
அல்லலறுத் தானந்தம் அருளும் நாம
ஜெபஞானம் செய்வித்தே ஜென்மம் நீங்கிச்
செகமீதில் உய்யும் வழிச் சிறப்பும் காட்டிச்
செவிஞானம் இல்லார்க்கும் சிவனின் ஞானம்
சேர்ந்திட உட் பொருளுணர்ந்து சொல்லும் சீலா
சிவன் பாதம் சேரச்சிவ நாமம் பாடும்
சிவஞான சிரோமணியே வாழி வாழி

இடம்: திவ்விய ஜீவனசங்க மண்டபம் நல்லூர்
காலம்: 15 - 05 - 1995 திங்கட்கிழமை
நேரம்: மாலை 3-30 மணி
தலைவர்: திரு. சு. சிவபாலன்
(பிரதம கணக்காளர், செயலகம், யாழ்ப்பாணம்.)

### நிகழ்ச்சி

★ விழா நாயகன் நல்லூர் சட்டநாதர் ஆலயத்தில் இருந்து மங்கல வாத்தியத்துடன் அழைத்துவரல்.

★ ஆராத்தி

★ மங்கல விளக்கேற்றல்
- வே. பொ. பாலசிங்கம் அவர்கள் (யா. மா. ஆணையாளர்)
- திரு. S விஜயரட்ணம் அவர்கள் (தலைவர் வட பிராந்திய சாயி நிறுவனங்கள்)
- திரு. S. குமாரவேல் அவர்கள் (முதுநிலை விரிவுரையாளர் பௌதிகத்துறை)

★ இறைவணக்கம்
பண்ணிசை வள்ளல்
S. திருஞானசம்பந்தன் அவர்கள்

★ அமைதி வணக்கம்

★ வரவேற்புரை
S. R. சரவணபவன்
(ஆன்மீக இணைப்பாளர், வடபிராந்திய சாயி நிறுவனங்கள்)

★ தலைமையுரை

★ ஆசியுரை
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள்
(நல்லை ஆதீனக் குருமகா சந்நிதானம்)

★ வாழ்த்துரை
- ஆத்மஜோதி நா. முத்தையா அவர்கள் (பிரதம விருந்தினர்)
- கவிமாமணி ந. வீரமணி ஐயர் அவர்கள்

★ நாயகன் கௌரவம்
- மாலை அணிவித்தல்
  திரு உ. கந்தசாமி
  (தலைவர், சத்யசாயி நிலையம்-யாழ்ப்பாணம்)
- பொன்னாடை போர்த்தல்
  S. R. நடராசா
  (அதிபர், அண்ணா தொழிலகம்)
- பதக்கம் பூட்டல்
  தாவடி சத்திசாயி சமித்தியினர்
- பாமாலை சூட்டல்

★ பாராட்டுரை
- செ. சிவஞானம் அவர்கள் (சிறப்பு விருந்தினர்)
  (இலங்கைச் சாயி நிறுவனங்களின் தலைவர்)
- S. கனகரத்தினம் அவர்கள்
  (தலைவர், திவ்ஜ ஜீவன சங்கம் யாழ்ப்பாணம்)
- கலாநிதி சபா. ஜெயராசா அவர்கள் (முதன்மை விருந்தினர்)
  (தலைவர், இராமநாதன் நுண்கலைப்பீடம், யாழ். பல்கலைக்கழகம்)

★ பதிலுரை
விழா நாயகன் அவர்கள்

★ நன்றியுரை
செயலர் அவர்கள்

★ நாமாஞ்சலிச் சிறப்பிசையரங்கு
திரு வேலுப்பிள்ளை சிவஞானம் — பாட்டு, வயலின்
திரு. சண்முகலிங்கம் நாகராசா — மிருதங்கம்
திரு சதாவேல்மாறன் — தபேலா
திரு சிவாஜி சிவராமன் — கஞ்சிரா
ஒலி, ஒளி, வீடியோ அமைப்பு
மேகாஸ் வீடியோ, அரியாலை

வீரகேசரியில் 07-05-95 நடைபெறும் என அறிவிக்கப்பட்டு தவிர்க்க முடியாத காரணத்தால் 15-05-95 அன்று நடைபெறும் இவ்விழாவில் அனைவரும் கலந்து நாமசங்கீர்த்தனத்தின் நலம் பெற்றேகுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

நன்றி.

இ குகதாசன்,
செயலர், சிறப்பு விழாக் குழு

14-05-95


விளம்பரம் வெளிவர உளம் மலர்ந்தோர்

சிவகணேசன் புடைவையகம்
மின்சாரநிலைய வீதீ, யாழ்ப்பாணம்.

திருமாட்டி புடைவைக் கடல்
மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்.



# தாதியர் பயிற்சி நெறி
# DIPLOMA IN NURSING

10-6-95ல் ஆரம்பமாகின்றன

1 தமிழீழத்தின் தனியார் துறை தாதியப்பயிற்சியின் ஆரம்ப கர்த்தாவும், வேலூர் தாதியப் பயிற்சியில் 30 வருட கால அனுபவம் உடையவரும், தாதியர் போதனாசிரியராக 12 வருட கால அனுபவம் உள்ளவருமான கலாநிதி V P சுந்தரராஜன் அவர்களால் வகுப்புகள் நடத்தப்படுகின்றன.
2. கல்வித் தகைமை:- க. பொ. த (சாதாரணம்).
3. விசேட மருந்தியல் பாடம் உட்பட, குழந்தைப் பராமரிப்பு, மருத்துவ உறவியல், குழந்தை உளவியல் ஆகிய பாடங்களும் உள்ளடக்கப்பட்டன.
4. நகரின் பிரபல வைத்தியசாலையில் இரண்டு மாத கால செய்முறைப் பயிற்சிகள்.
5 பாடசாலை செய்முறைப் பயிற்சிகள் யாவும் பதிவு பெற்ற தாதிய உத்தியோகஸ்தர்களினால் கற்பிக்கப்படுகின்றன.

விவரங்கட்கு:-

## சாயி மருத்துவக் கல்லூரி

இல:- 10 இல 6, பருத்தித்துறை வீதி,
யாழ் நகர் — தமிழீழம்.

(சி- 1387)



# வீடியோ படப்பிடிப்பாளர்களுக்கு
## ஓர் மகிழ்ச்சிகரமான செய்தி

உங்கள் பிரதிகளுக்கு M X 50 மூலம் சிறந்த கலர் அமைப்புடன் குறைந்த செலவில் எந்நேரமும் மிக்சிங் செய்து தரப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவிக்கின்றோம்.

★ றீகல் வீடியோ ★
ஈச்சமோட்டை,
யாழ்ப்பாணம்

[8536]



# புதிய பேரடேனியா இன்ஸ்ரிரியூட்

K K. S. வீதி, கொக்குவில்.

சகல வகுப்புகளுக்குமான சித்திரம் நடைபெறுகின்றது.
செல்வி பிரமிளா

சகல வகுப்புகளுக்குமான சங்கீதம் நடைபெறுகின்றது.
திரு. ஞானசீலன்

சகல பிரிவுக்குமான சமஸ்கிருதம் நடைபெறுகின்றது
திரு. சர்மா

ஆரம்பம்: 15-5-95

சகல பிரிவுக்குமான சிங்களம்
(எழுத, பேச, வாசிக்க)
திரு. E. S. பியதாச
பிரிவு III

## ஆண்டு 4, 5 க்கான புலமைப் பரிசில் வகுப்பு

தமிழ் — ஞானதிருக்கேதிஸ்வரன்
கணிதம் — திரு. கண்ணன்

[சி- 1355]


# மருத்துவ மாணவர்களுக்கு ஓர் அன்பு மடல்!

எனது பேரன்புமிக்க மருத்துவ மாணவர்களே!

மிகவும் ஆழ்ந்து சிந்தனை செய்துவிட்டு, பத்திரிகைகளில் வெளிவந்த அறிக்கைகளைப் படித்துவிட்டு, உங்கள் எதிர்காலத்தையும், எமது மக்களின் நன்மையையும் கருதி இந்தக் கடிதத்தை உங்களுக்கு எழுதத் தீர்மானித்துவிட்டேன்.

மூடப்பட்ட வட இலங்கை மருத்துவக் கல்லூரியின் 37 மாணவர்கள் எமது மருத்துவ பீடத்தில் கல்வி தொடர அனுமதிப்பதை எதிர்த்து உணவு அருந்தாமல் இருக்கிறீர்கள்.

முதலில் சில தகவல்களைத் தர விரும்புகிறேன். ஆரம்பத்திலிருந்தே கொள்கை அளவில் தனியார் மருத்துவக் கல்லூரியை எதிர்த்தவன் நான்.

தான் தோன்றியாக தொடங்கிய வட இலங்கை மருத்துவ கல்லூரியை அரசாங்கம் அங்கீகரிப்பதற்கு முன், சிபார்சு வேண்டி யாழ். பல்கலைக் கழகத்தை அணுக, மருத்துவ பீடம் ஒரு குழுவை 1987-ஆம் ஆண்டில் நியமித்தது. நான் அப்போது மருத்துவ பீடாதிபதியாக இருந்ததால், குழுவின் தலைவரானேன். அதன் அங்கத்தவர்கள் பேராசிரியர்கள் சிவசூரியா, கணேஸ்வரன், பரமேஸ்வரன் ஆவர். மருத்துவம் படிப்பிப்பதற்கு அந்தக் கல்லூரியின் தரம், வசதிகள் இவற்றைப் பார்த்து அறிவிப்பதே எமது கடமையாக இருந்தது; கொள்கைகளை நிர்ணயிப்பது அல்ல. நாம் 16. 4. 1987இல் எமது அறிக்கையைச் சமர்ப்பித்தோம். அப்போது அங்கே 135மாணவர்கள் முதல் இரண்டு ஆண்டுகளில் படித்துக் கொண்டிருந்தார்கள். முதல் இரு ஆண்டுகள் படிப்பிப்பதற்கு வசதிகள் போதும் என்றும், தொடர்ந்து மருத்துவம் படிப்பிப்பதற்கு ஏற்ற வசதிகளோ, வைத்தியசாலையோ இல்லை என்றும் அறிக்கையில் தெரிவித்தோம்.

மேலும், பின்தங்கிய பிரதேச வெட்டுப்புள்ளி நிலையில் பார்த்த போதும் 15 மாணவர் மருத்துவம் படிப்பதற்கு தகுதியற்றவர் என்று காட்டினோம்.

அந்த அறிக்கை பல்கலைக்கழக செனற் சபையில் சமர்ப்பிக்கப்பட்ட போது ஏகோபித்த எதிர்ப்பு தனியார் மருத்துவக் கல்லூரிக்கு எதிராக எழுந்தது இவை எல்லாம் அந்தக் கல்லூரி மூடுவதற்கு அடிப்படைக் காரணங்களாகும்.

மாணவர் கொழும்புக்கும் வேறு நாடுகளுக்கும் சென்றனர். இந்த 135 மாணவர்களில் மிஞ்சியவர்களே இந்த 37 பேர் கொழும்பில் நடத்திய இரண்டாம் எம். பி. பி. எஸ். பரீட்சையில் அவர்கள் சித்தியடைந்து விட்டார்கள். ஆகவே தொடர்ந்து மருத்துவம் படிப்பதற்குத் தகுதியற்றவர்கள் என்று சொல்ல முடியாது.

இப்படியான நிலை வடகொழும்பு தனியார் மருத்துவக் கல்லூரிக்கு (நாகம) ஏற்பட்டது. அரசாங்கம் அதை மூடுவதற்கு முன் அங்கே கற்ற எல்லா ஆண்டு மாணவருக்கும் தொடர்ந்து படிக்க வசதி அளித்தது. இந்த வசதிதான் சம்பந்தப்பட்ட 37 மாணவர்களுக்கும் வேண்டும். அவர்களுக்கு யாழ் மருத்துவ பீடத்தில்வசதி தருமாறு பல்கலைக்கழக மானியக்குழு யாழ் துணைவேந்தருக்கு ஆணையிட்டது. எனினும் அவர் இங்கே மருத்துவபீட ஆசிரியர் முதல் பல்கலைக்கழக மூதவை ஈறாக ஆலோசனையும் அதிகாரமும் கேட்டபின்பே செயல்பட முயன்றார்.

இப்போது இங்கே கல்விகற்கும் மாணவரைப் பாதிக்காத வகையில் பாடவிதானத்தை அமைக்க முடியும் என்பது மருத்துவ பீடத்தினரின் அபிப்பிராயம்; புரிந்துணர்வும் மனிதாபிமான சிந்தனையும் மட்டும் வேண்டும் இந்தச் சிந்தனை மருத்துவ ஆசிரியர்களுக்குப் புதியதல்ல மருத்துவ பீடத்துக்கு வந்த மாணவரில் சிலர் உடல், மனநோயினாலும் குடும்ப சமூக இன்னல்களாலும் பாதிக்கப்படும். போது பல தடவைகள் பரீட்சையில் சித்தியடையாத நிலையில் ''Grace Chance'', ''Mercy Chance'' என்று கூறி படிப்பைத் தொடர விட்டிருக்கிறார்கள் இந்த மனிதாபிமான உணர்வை நீங்கள் இந்த 37 இந்த நாட்டு இளைஞருக்குக் காட்டகூடாதா?

ஆகவே உங்கள் எதிர்காலத்தில் மிகவும் கரிசனை கொண்ட மூத்தோர் சமூகப் பெரியோர், உங்கள் மருத்துவ ஆசிரியர்கள் கூறும் ஆலோசனையைக் கேட்கும்படி மிகவும் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

வேண்டாம் மனிதாபிமானம் இல்லாத இந்தப் போராட்டம்

எமது பெருமை, மற்ற பிரதேச பல்கலைக் கழகங்கள் மூடப்பட்டிருக்கும் வேளைகளில், எமது பல்கலைக்கழகம் போரின் மத்தியிலும் இயங்கியதுதான். அந்தப் பெருமையை இழக்க வழி செய்யாதீர்கள்.

நீங்கள் இப்போது தெரியாமல் செய்யும் காரியம் ஊருக்கும் நல்லதல்ல; உங்கள் மருத்துவத்தொழிலின் பேருக்கும் நல்லதல்ல; விடுதலைக்காக நாம் புரியும் போருக்கும் உகந்ததல்ல.

இந்த 37 பேர்களையும் உங்கள் கல்வியை எந்த விதத்திலும் பாதிக்காத வகையில் சேர்த்து, புறம்பான சான்றிதழ் கொடுப்பதற்கு வழி உண்டு.

நீங்கள் உண்ணாவிரதத்தை கைவிடுவதனால் வெற்றியே அடைகிறீர்கள், இந்த நாட்டு மக்களின் நம்பிக்கை உங்களைச் சாரும்; உங்கள் ஆசிரியர்களின் பேராதரவு உங்களுக்குக் கிடைக்கும்.

ஓர் அபாயகரமான நிலையை தவிர்த்தனால் ஏற்படும் நிறைவும் தன்னம்பிக்கையும் உங்களுக்கு மனத்தில் நிலைக்கும்.

இதை விட ஒரு எதிர்கால டொக்டருக்கு வேறு என்ன வேண்டும்?

மிக நம்பிக்கையுடன் இந்தக் கடிதத்தை முடிக்கிறேன்.

அன்புடன்
செ சிவஞானசுந்தரம் (நந்தி)
முன்னாள் பேராசிரியர்
யாழ். மருத்துவ பீடம்

[13-5-1995]

# எமக்குள்ளேயே பாரபட்சமா?
# சென். ஜோன்ஸ் அதிபர் கேட்கிறார்

ஒருவருக்கு கல்வி கிடைக்கச் சந்தர்ப்பம் கிடைக்கும் போது அவருக்கு கல்வி கிடைக்கச் செய்ய வேண்டும் என்பதே பொதுவான கருத்தாகும்.

எமது சமுதாயத்தில் பணம் உள்ள வர்க்கமும் இருக்கிறது. பணம் இல்லாத வர்க்கமும் இருக்கிறது கல்வியைப் பொறுத்தவரையில் எந்த வர்க்கத்துக்குச் சந்தர்ப்பம் கிடைத்தாலும் அந்தச் சந்தர்பத்தை வழங்க வேண்டியது அவசியமாகும்'

1977 ஆம் ஆண்டு தரப்படுத்தல் திட்டத்தை அரசு கொண்டு வந்த வேளை, தமிழ் மக்களுக்கு பாரபட்சம் காட்டப்படுவதாக கூறி கூடுதல் இடம் வேண்டும் என்று கோரிப் போராட்டம் நடத்தினோம்.

ஆனால் இன்று எமக்குள்ளேயே பாரபட்சம் காட்டப்படுவது வரவேற்கத் தக்கதல்ல

சமுதாயத்தேவையை கருத்தில் கொண்டும் —

கல்விக்கு சந்தர்ப்பம் கிடைக்கும் போது அதற்குச் சந்தர்ப்பம் அளித்தும் — 37 மாணவர்களையும் அனுமதிக்க வேண்டும்.

வெளிநாடுகளில் இப்படியான தனியார் மருத்துவக் கல்லூரிகள் தாராளமாக உள்ளன. இங்கிருந்த கல்லூரி இயங்கமுடியாது போனதால் இவர்களுக்கு இடம் வழங்க வேண்டியது அவசியம்.

கல்வியில் காட்டப்பட்ட பாரபட்சமே இன்றைய விடுதலைப் போராட்டம் வளர்வதற்குத் தூண்டுகோலாக அமைந்தது என்பதனை மறந்துவிட முடியாது.

— இவ்வாறு சென். ஜோன்ஸ் கல்லூரி அதிபர் திரு. எஸ் தனபாலன் கருத்துத் தெரிவித்தார்.

# பணக்கார மாணவரே பயின்றனர் என்பதை ஏற்கவே முடியாது

## யாழ். இந்துக் கல்லூரி அதிபர்

தொண்ணூறு சதவீதமான பொது மக்களின் மனிதாபிமான கோரிக்கையின் அடிப்படையிலும், தமிழீழத்தின் தேவையை பொறுத்தும் 37 மாணவர்களையும் மருத்துவ பீடத்தில் இணைப்பதே நல்லது.

எமது மருத்துவபீடத்தில் போதிய வசதி இல்லை. ஆனபடியால் 37 பேரையும் அனுமதிக்கக்கூடாது என்று தெரிவிப்பது, யாழ். பல்கலைக்கழகத்துக்கு மேலதிக மாணவர்களை அனுமதிக்க வேண்டும் என்று விடுக்கப்படும் குரலைப் பாதிக்கும்.

பணக்கார மாணவர்கள் தான் வட இலங்கை மருத்துவக் கல்லூரியில் படித்தார்கள் என்று கூறுவதை ஏற்க முடியாது. எனக்கு தெரிந்தவரை பலர் காணியை ஈடு வைத்தோ, விற்றோ இந்தக் கல்லூரியில் படித்தார்கள். அந்தப் பிள்ளைகளின் பெற்றோர்கள் தமது பிள்ளைகள் டாக்டராக வேண்டும் என்ற அபிலாஷையுடன் இதனைச் செய்தார்கள்.

இன்றுள்ள சூழ்நிலையில் அடுத்த நிமிடம் என்ன நடக்குமோ என்று தெரியாது ஏங்கிக் கொண்டிருக்கும் சூழ்நிலையில், சுமுகமான சூழ்நிலை ஒன்றை ஏற்படுத்தி எமது சக்தியை ஒன்று திரட்டி ஒருமுகமாக அத்தியாவசியப் பிரச்சினைகளை எதிர்நோக்க வேண்டியது அவசியம்.

எமது பகுதி மாணவர்களை பல்கலைக்கழகத்தில் சேர்ப்பதற்கு கொழும்பு அரசாங்கம் முடிவு எடுத்த பின்னர், நாமே நமக்குள் மோதிக் கொள்வதும், வாதப்பிரதிவாதம் செய்வதும் சமூகமுன்னேற்றத்துக்குஉதவாது.

— யாழ். இந்து அதிபர் திரு. அ. பஞ்சலிங்கம் இவ்வாறு தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

புதிய 10 ஹோஸ்பவர் இந்தியன் மாருதி எஞ்சின் விற்பனைக்குண்டு. தொடர்பு ஒட்டக் றொலெக்ஸ், 340, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (8532)

மணித்தாராக் குஞ்சுகள் விற்பனைக்குண்டு. தொடர்பு: செ. சரவணமுத்து, இல. 50/33, செட்டித்தெரு. நல்லூர். (36610)

(1) Canon AE - 1 Program Still Camara. (2) Nikon FM - 2 Still Camara [3] M - 1000 வீடியோ கமரா [4] MX - 10 மிக்சர் [5] A V - 5 மிக்சர் ஆகியன விற்பனைக்குண்டு. தொடர்பு: நீகல் வீடியோ, ஈச்ச மோட்டை, யாழ்ப்பாணம். (8535)

புதிய பற்றறியுடன் பாவனையிலுள்ள மினி மைனர் கார் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: டாக்டர் புனிதவதி கருணாகரன் அம்மன் கோயிலடி, வரியப்புலம் சுன்னாகம் அல்லது மாவட்ட வைத்தியசாலை, தெல்லிப்பழை (மானிப்பாய்) (8348)

இல. 358/8 நாவலர் வீதியிலுள்ள வீடும், மூன்று பரப்பு பதினைந்தரை குழி நிலமும் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும்: வி. சிவலோகநாதன். உசன், மிருசுவில். நேரம் சனி, ஞாயிறு கிழமை நாட்களில் பற்பகல் 3-00 மணிக்கு பின்பு. [36616]

## கார் விற்பனைக்கு

புதிய பற்றறியுடன் ஓடும் நிலையிலுள்ள ஜப்பான் மிற்சுபிசி லான்சர் ஆடம்பரக் கார் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: இல. 48/1. முதலாம் ஒழுங்கை (ஐங்கரன் விளையாட்டுக் கழக ஒழுங்கை), பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம். (36609)

Japan தயாரிப்பான Mitsubishi கார் விற்பனைக்கு உண்டு, தொடர்பு: 102, ஆடியபாதம் வீதி. நல்லூர். தொடர்பு: நேரம் காலை 10—12 மாலை 4—6 வரை. [36632]

## தூரக்குஞ்சு விற்பனை

உயர் ரக தாராக் குஞ்சுகளுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய முகவரிகள்: அரசினர் பண்ணை. பலாலி வீதி, திருநெல்வேலி, N. ரமேஷ் (வட்டுக்கோட்டை வீதி, சித்தன்கேணி, (சுப்பர் சோனிக் அடுத்த இடம்) (36614)

## வர்த்தகமும் நிதியும்

வர்த்தகமும் நிதியும் Past Paper 1990 — 1994 வரை [1991—1992 Special] மொத்தம் 7 Exams Paper ஆக்கம். E. செல்வநாயகம் Royal College விற்பனையாகிறது. பூபாலசிங்கம் புத்தக நிலையம், யாழ்ப்பாணம். [சி-1369]

## வெளிவந்துவிட்டது

கும்பகர்ணன் வதைப்படலம் பல்கலைக்கழக வெளிவாரி முதற்கலைத் தேர்வுக்கும் G. A. Q. பாலபண்டித மாணவருக்கும் ஏற்றது. 5ஆம் ஆண்டு ஆரம்ப பொது அறிவு (தொகுப்பு: சி. பொன்னம்பலம்) மக்மிலன் புத்தகசாலை, யாழ்ப்பாணம். ஸ்ரீகாந்த புத்தகசாலை, நல்லூர். (சி-1374)

## MATHS, ENGLISH

O/L 95 Distinction, Credit பெறுபேறடைய ஆரம்பத்தில் இருந்து விசேடமாக B Sc. ஆசிரியரால் கற்பிக்கப்படும். தினமும் காலை 6-00 8-00, பிற்பகல் 3-00 — 5-00. தேவைப்பட்டால் மாலை 6 00—8-00 வரை. இல 85, சிவன் கோவிலடி. சிவன் கோவில் மேற்கு வீதி. திருநெல்வேலி. [36592]

## PASCAL CLASS

உயர்வகுப்பு மாணவர்களுக்காக. 14-5-1995 அன்று பிரத்தியேக Pascal வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன. தொடர்புகளுக்கு: K Vignesh. North Ceylon Technical Institute 14 St Peters lane, Jaffna (சி-1193)

## இடமாற்றம்

454, ஆஸ்பத்திரி வீதியில் இயங்கிய ஒட்டகப்புலம் முறிவு நோவு வைத்தியசாலை தற்போது இல 50, சண்டி வீதி சுண்டிக்குளி — பழைய ஆசீர்வாத அச்சகத்தில் சனி ஞாயிறு தவிர்ந்த நாள்களில் இயங்கும் (36599)

## O/L MATHS

G C E (O L) இல் கட்டாய பாடமாகிய கணித பாடத்தில் இதுவரையும் சித்தியடையாதவர்களுக்கும் ஆரம்ப அறிவேயில்லாதவர்களுக்கும் 28 வருட அனுபவமுடைய ஆசிரியரினால் 40 மணித்தியாலங்களில் Distinction பெறுபேறடையக் கற்பிக்கப்படும் ஆரமுகநாதன் 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, லோகேந்திரா வீதி, சுண்டிக்குளி. [8531]

## இறைச்சிக்கோழி விற்பனை

குறைந்த விலையில் புறொயிலர் விற்பனைக்கு உண்டு. எடை கூடிய புறொயிலரும் உண்டு. சுத்தம் செய்து கொடுக்கப்படும். 54/2, சந்தன மாதா கோயில் முன் ஒழுங்கை, கொழும்புத்துறை வீதி, பாண்டியன் தாழ்வு யாழ்ப்பாணம். [36635]

Broiler மற்றும் இறைச்சிக் கோழிகள் தினமும் காலை 7 மணி தொடக்கம் சுத்தம் செய்து பெற்றுக் கொள்ளலாம். எங்கள் ஸ்தாபனத்திற்கு முகப்பில் இருக்கும் விற்பனை நிலையம் எங்களுடையதல்ல. உங்கள் வசதிக்காக எங்கள் வாசலில் Nallur Video Centre பெயர்ப் பலகை உண்டு. [36633]

## மணப்பெண் தேவை

செவ்வாய்க் குற்றம் இல்லாத 34 வயதுடைய ஆசிரியருக்கு (கலைச் சிறப்பு) தகுதியான பட்டதாரி மணமகனைத் தேடுகின்றனர். 24-5-95 வரையும் தொடர்பு வரவேற்கப்படும். விளம்பரகாரர் இல. 791. மே/பா உதயன், யாழ்ப்பாணம் [36581]

## தேவை

விற்பனையாளர்கள், விற்பனை உதவியாளர்கள் தேவை நகர எல்லைக்குள் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது. தொடர்பு கொள்ளவும்: யாழ் நுகர்வோர் காட்சியகம், சிவன் வடக்கு வீதி, இல. 441, K. K S. வீதி, யாழ்ப்பாணம். [36631]

## வகுப்புகள்

யாழ்ப்பாணம் சங்கீத வகுப்புகள் A/L 96 97 கலைப்பிரிவுக்கான சங்கீத வகுப்புக்கள் ஆரம்பிக்கப்பட உள்ளன. தொடர்பு: 94, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி யாழ்ப்பாணம். [36634]

# விக்னா

கல்வி நிறுவனம்

A/L 96

கணக்கியல்

புதிய பிரிவு

ஆரம்பம்:

14 - 5 - 95 3 மணி

திரு. கலைச்செல்வன்

[சி-1384]

# உதயன்

நிறுவன ஆதரவில்

POINTPEDRO UNITED SPORTS CLUB

உதயன் சுற்று வெற்றிக்கிண்ணத்துக்காக

பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகம்

நடத்தும்

ஏழு பேர் கொண்ட அணிகளுக்கிடையிலான

மாபெரும்

# உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி 1995

- போட்டிகள் யாழ். மாவட்ட ரீதியில் இடம்பெறும்.
- விண்ணப்ப முடிவு திகதி: 18 – 05 – 1995
- தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி:

உதயன் பத்திரிகை நிறுவனம்,
292/2 நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

செயலாளர்,
பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகம்,
பருத்தித்துறை.

(சி/1168)

# BITSMANS

கல்வி நிறுவனம்

மானிப்பாய்

மீண்டும் ஒரு புதிய இறுதிப் பிரிவு

## O/L DAY CLASS

- எமது வழமையான "Super Grade" ஆசிரிய குழுவினால் கற்பிக்கப்படுகின்றது.
- கணித வகுப்பு வாரத்தில் 8 மணித்தியாலங்கள் நடைபெறும்.

ஆரம்பம்: 15 - 05 - 1995
திங்கள் காலை 8-00 மணி

[சி-1386]

வலிகாமம் தெற்கு பிரதேச
கலை கலாசாரப் பேரவை

# மாபெரும் கலை விழா

3ஆம் நாள்: (இறுதி நாள்)
15 – 05 – 1995 திங்கள்
[கலை பண்பாட்டுக் கழக ஆதரவுடன்]

இடம்:
வலி தெற்கு பிரதேச சபை
உடுவில் உப அலுவலக
திறந்த வெளி அரங்கு

தலைவர்: திரு. புதுவை இரத்தினதுரை
(பொறுப்பாளர், விடுதலைப்புலிகள் கலை பண்பாட்டுக் கழகம், தமிழீழம்)

முதன்மை விருந்தினர்:
திரு. சி. இளம்பரிதி
(யாழ் மாவட்ட அரசியற்றுறைப் பொறுப்பாளர்)

சிறப்பு விருந்தினர்கள்:
திரு. செ. இளையவன்
(பொறுப்பாளர், அரசியற்றுறை கடற்புலிகள், தமிழீழம்)
திரு நா. பல்லவன்
[பொறுப்பாளர், திரைப்படப் பிரிவு கலை பண்பாட்டுக் கழகம்]
செல்வி சு. தணிகைச்செல்வி
[பொறுப்பாளர், அரசியற்றுறை மகளிர் அமைப்பு, யாழ். மாவட்டம்]

## ★ நிகழ்ச்சி நிரல் ★

பி.ப 5-30 மணி மங்கள விளக்கேற்றல்
செல்வி மகேஸ்
[பொறுப்பாளர், க. ப. ம. மகளிர் அமைப்பு, தமிழீழம்]
திரு இ ம அன்பரசன்
[துணைப்பொறுப்பாளர், க. ப. க., தமிழீழம்]

5-35 மணி மௌன அஞ்சலி

5-40 மணி மங்கள இசை
லயஞான பூபதிகள்
வி கே. கானமூர்த்தி பஞ்சமூர்த்தி குழுவினர்

6-40 மணி இசைக்கச்சேரி
இசைக்கலைமணி
வர்ணராமேஸ்வரன் - பாட்டு
இசைக் கலாவித்தகர்
சு. கோபிதாஸ் - வயலின்
இசைக்கலா வித்தகர்
க. கண்ணதாசன் - மிருதங்கம்
க. மயூரன் - தபேலா
வ. வி. கேதீஸ்வரன் - முகர்சிங்

7-45 மணி வரவேற்புரை
திரு. கலியுகன் அவர்கள்
[வட்டப பொறுப்பாளர், உடுவில்]

7-55 மணி தலைமை உரை

8-15 மணி பிரதம விருந்தினர் உரை

8-30 மணி சிறப்பு விருந்தினர்கள் உரை

9-00 மணி மானிப்பாய் கலைக்கோயில் மாணவிகள் வழங்கும் பரத நாட்டிய விருந்து
தயாரிப்பு நட்டுவாங்கம்:
திருமதி லீலா செல்வராசா
[வருகை விரிவுரையாளர், சுன்னாகம் இராமநாதன் நுண்கலைக்கழகம்]
பாட்டு
செல்வி சூரியகுமாரி மார்க்கண்டு
நாட்டியக் கலைமணி
செல்வி உமா பாலசுந்தரம்
மிருதங்கம்
திரு. க. கண்ணதாசன்
[உதவி விரிவுரையாளர், இராமநாதன் நுண்கலைக்கழகம்)
வயலின்
பிரம்மஸ்ரீ எஸ் வெங்கடேஸ்வரசர்மா

10 00 மணி கோப்பாய் உதயதாரகை கலைக் குழு வழங்கும்
'அவள் ஒரு மாதிரி' நாடகம்

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

வலி. தெற்கு பிரதேச
கலை கலாசாரப் பேரவை

பிரதேச செயலகம்,
வலி தெற்கு, உடுவில்.
13 – 05 – 95

விளம்பர உதவி:
சேது வி ப. ஓபிற் சேவிசர்ஸ்,
காங்கேசன்துறை நெடுஞ்சாலை,
சுன்னாகம்.

[சி-1198]

## படையால் மாணவருக்கு தொல்லை

மட்டக்களப்பு மே.14 மட்டக்களப்பில் பாடசாலைக்குச் செல்லும் மாணவர்களை வழிமறிக்கும் படையினர் தமக்கு சந்தேகம் தரும் இடங்களை அந்த மாணவர்களைக் கொண்டே சோதனை செய்கின்றனர். கிரான், ஏறாவூர், ஐந்தாம் குறுச்சி சோனைக்குடியிருப்பு பகுதிகளில் படையினரின் இந்த நடவடிக்கை இடம் பெற்று வருகிறது. [இ-5]

அகில இலங்கை கம்பன் கழகத்தின்

# கம்பன்-விழா 1995

ஆறாம் நாள் நிகழ்ச்சிகள்
(14 - 05 - 1995) ஞாயிற்றுக்கிழமை

காலை 9-30 மணிமுதல்

★ மங்கள விளக்கேற்றல்
வைத்திய கலாநிதி
திரு. திருமதி எஸ். இராசசூரியர் அவர்கள்
(முன்னாள் தலைவர், யாழ். றோட்டறிக் கழகம்)

★ கடவுள் வாழ்த்து
சங்கீத பூஷணம்
திரு. சு. கணபதிப்பிள்ளை அவர்கள்
(பிரதிக் கல்விப் பணிப்பாளர் சங்கீதம்)

★ கம்பன் வாழ்த்து

★ வரவேற்புரை

★ தலைமையுரை
திரு. க. நடராஜா B. Sc. அவர்கள்
(அதிபர் ஹாட்லிக் கல்லூரி, பருத்தித்துறை)

★ தொடக்கவுரை
திரு. என் எஸ். தனபாலன் B A. அவர்கள்
(அதிபர், பரியோவான் கல்லூரி, யாழ்ப்பாணம்)

★ வாழ்த்துரை
திரு. நாக. சண்முகநாதபிள்ளை B. A. அவர்கள்
(அதிபர், யாழ். மத்திய கல்லூரி)

ஐயந் தெளி அரங்கம்

பொருள்:
'கம்பனின் குறள் விளக்கம்'

★ தெளிவிப்பவர்
பேராசான், இலக்கண வித்தகர்
இ. நமசிவாய தேசிகர் அவர்கள்

★ ஐயுறுவோர்
செல்வன்கள் ஸ்ரீ. பிரசாந்தன்
த. சிவசங்கர்
ச. மணிமாறன்
க. யோகநாதன்
க. ஜெயநிதி

மாலை 4 - 30 மணி முதல்

★ மங்கள இசை
'இசைப் பேரறிஞர்' எம். பஞ்சாபிகேசன்,
திரு ஏ. எஸ். சுதந்திரன் குழுவினர்

★ மங்கள விளக்கேற்றல்
திரு. திருமதி து. சிவராசா அவர்கள்

★ கடவுள் வாழ்த்து
சங்கீத பூஷணம் எஸ். குமாரசாமி அவர்கள்

★ கம்பன் வாழ்த்து

★ வரவேற்புரை

★ தலைமையுரை
பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை அவர்கள்
(கலைப் பீடாதிபதி, யாழ். பல்கலைக்கழகம்)

★ தொடக்கவுரை
திரு. க. பொன்னம்பலம் அவர்கள்
(அரச அதிபர், யாழ்ப்பாணம்)

★ வாழ்த்துரை
வைத்திய கலாநிதி
செ. சு. நச்சினார்க்கினியன் அவர்கள்
(சிரேஷ்ட விரிவுரையாளர், யாழ். பல்கலைக் கழகம்)

★ நிறைவுரை
பேராசிரியர் செ. சிவஞானசுந்தரம் ('நந்தி') அவர்கள்
(முன்னாள் மருத்துவ பீடாதிபதி, யாழ். பல்கலைக்கழகம்)

உருவப்படத் திறப்பு
அமரர் ஆசிரியர் மணி
ஆர் சி. சுப்பிரமணியம் அவர்கள்
உருவப்படத் திறப்பு

வழக்காடு மன்றம்

★ நீதியரசர்கள்
திரு. தி திருநந்தகுமார்
திரு. க. இரகுபரன் B. A.
திரு. க. குமாரதாசன்

★ வழக்கு
விஸ்வாமித்திரர் குற்றவாளி

குற்றந் தொடுப்போர்
திரு. த. சிவகுமாரன்
திரு ஆறு. திருமுருகன் B. A.
திரு ஐ. சுதிர்காமசேகரன்
திரு. ச. மணிமாறன்

மறுப்போர்
திரு. இ. ஜெயராஜ்
திரு. இரா. செல்வவடிவேல்
திரு. த. சிவசங்கர்
திரு. ஸ்ரீ. பிரசாந்தன்

வில்லிசை

பொருள்:
அகலிகை சாப விமோசனம்

★ வழங்குபவர்கள்
"கலாவினோதன்" சின்னமணி குழுவினர்

– நிறைவு –

[சி-1186]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரஷ்ய-அமெரிக்கமுரண்பாடு உலகைமீண்டும் கெடுபிடி யுத்த நிலைக்குள் தள்ளிவிடுமா?

## சர்வதேச விவகாரங்களில் இணங்கி வர 2 நாடுகளும் மறுப்பு

வெளி உலகில்

இரண்டாவது உலக மகா யுத்தம் முடிவடைந்து 50 ஆண்டுகள் கழிந்து விட்டன.

இது சம்பந்தமான கொண்டாட்டங்கள் கடந்த வாரம் பேர்லினிலும், லண்டனிலும், பாரிஸிலும், மாஸ்கோவிலும் இடம்பெற்றன.

ஜனாதிபதி பில்கிளின்ரன், பொரீஸ் யெல்ட்சின், ஜோன் மேயர், ஹெல்மட்கோல், மிற்றர் ரண்ட் உட்பட உலகத் தலைவர்கள் பலரும் இந்த வைபவங்களில் கலந்து கொண்டனர்.

1989 – 90 களில் சோவியத் யூனியன் சிதறுண்டு போய் உலகில் கம்யூனிஸம் வீழ்ச்சி அடைந்தது.

அதன் பின்னர், மீண்டும் உலகம் கெடுபிடி யுத்தம் ஒன்றுக்குள் பிரவேசிக்கும் அறிகுறிகள் தற்போது தென்படுகின்றன. உலக மகா யுத்த வெற்றி விழாவிலும் இதன் எதிரொலிகள் நன்கு தொனித்தன.

சோவியத் யூனியனின் வீழ்ச்சிக்குப் பின்னர் முதல் தடவையாக ரஷ்ய — அமெரிக்க உறவில் விரிசல் ஏற்பட்டிருக்கிறது.

ரஷ்ய — அமெரிக்க உறவு ஒரு நெருக்கடியான கட்டத்தில் (Difficult Point) இருப்பதையும் எவரும் அசட்டை செய்து விட முடியாது.

**உலக மகா யுத்தம்**

1939 இல் ஆரம்பமாகி 6 வருடங்கள் நடந்த இரண்டாவது உலக மகா யுத்தத்தின் போது ஜேர்மனி ஜப்பான், இத்தாலி ஆகிய நாடுகள் ஒரே அணியில் நின்று யுத்தம் புரிந்தன.

இந்த நாடுகளுக்கு எதிராக நேச நாடுகள் என்று அப்போது அழைக்கப்பட்ட அமெரிக்கா, ரஷ்யா, பிரிட்டன், பிரான்ஸ் ஆகியவை போரிட்டன.

அடோல்ப் ஹிட்லரின் உலக ஆதிக்க வெறியை முறியடிப்பதற்காக நடந்த இப்போரில் வெற்றியை கடைசியில் உறுதிப்படுத்தியது ஜப்பானிய நகரங்களான ஹிரோஷிமாவிலும் நாகா சாக்கியிலும் போடப்பட்ட அணுக்குண்டுகள்தான்.

இருந்த போதிலும் போரின் வெற்றிக்கு ரஷ்யா ஆற்றிய பெரும் பங்கை எவரும் மறந்துவிடமுடியாது.

இந்தப்போரில் 2 கோடி 60 லட்சம் வீரர்களை ரஷ்யா இழந்தது.

ரஷ்யப் படைகளின் மகத்தான வெற்றிகளுக்குக் காரணமாக இருந்தவர் அதன் தளபதி ஜோர்ஜிசுக்கோவ் (Georgy zhukov)

உலக மகா யுத்தம் முடிவடைந்த பின்னர் சர்வாதிகாரி ஜோசப் ஸ்ராலினின் களை யெடுப்புக்கு உள்ளாகியவர்களில் ஜோர்ஜிசுக்கோவ்வும் ஒருவர்.

1945இல் உலக மகாயுத்தம் முடிவடைந்த கையோடு உலகம் கிழக்கு - மேற்கு என்று இரண்டாகப் பிளவுண்டு கெடுபிடி யுத்தமும் ஆரம்பமாகிது.

இந்தக் கெடு பிடி யுத்தம் 1989–90களில் சோவியத் யூனியனின் வீழ்ச்சி வரை இருந்து வந்தது.

1950 இல் ஆரம்பமான கொரிய யுத்தம் முதல் சகல யுத்தங்களுக்கும் சர்வதேச அரங்கில் இருந்து வந்த ஆதிக்கப் போட்டியே ஒரு வகையில் காரணமாக இருந்திருக்கின்றன.

உலக மகாயுத்தத்தில் சோவியத் படைகள் செய்த மகத்தான தியாகங்களை பகிரங்கமாகப் பாராட்ட அமெரிக்காவுக்கு 50 வருடங்கள் சென்றதுக்கும் இந்த ஆதிக்கப் போட்டியும் வரட்டுக் கௌரவமும் தான் காரணமாக இருந்தன.

**இனவாதமும் தேசியவாதமும்**

சித்தாந்தப் போட்டிக்குப் பதிலாக தற்போது உலகில் தேசியவாதமும் இனவாதமும் மேலோங்கி நிற்கின்றன.

செச்சின்யாவில் ரஷ்யாவுக்கு எதிராக செச்சின்யர்கள் யுத்தம் செய்து வருகின்றனர். பொஸ்னியாவில் சேர்பியர்களும், முஸ்லிம்களும், குறோசியர்களும், யுத்தம் செய்து வருகின்றனர். றுவாண்டாவில் ஹீத்து இனத்தவர்களும் துட்சி இனத்தவர்களும் சண்டையிடுகிறார்கள். ஆப்கானிஸ்தானில் நடைபெறும் சண்டையிலும் இனவாதக் குழுக்களே முக்கிய பங்கு வகித்து வருகின்றன.

இவைகளில் செச்சின்யாவில் நடைபெறும் யுத்தமும் பொஸ்னியாவில் நடைபெறும் யுத்தமும் ரஷ்யா — அமெரிக்க உறவுகளில் வெடிப்பை ஏற்படுத்தி வருகின்றன.

அது மட்டும் அல்ல, அமெரிக்காவுடனான உறவைப் பாதிக்கும் விதத்தில் ரஷ்யா தனது வெளிநாட்டுக் கொள்கையை கடினப்படுத்தி வருகிறது. ஈரானுக்கு அணுசக்தி உலைகளை விற்கப் போவதாகக் கூறுகிறது.

நேட்டோவின் எதிர்காலம், வளைகுடாப் பிரச்சினை, ஆயுதக் கட்டுப்பாடு ஆகியவற்றிலும் ரஷ்யாவுக்கும் அமெரிக்காவுக்கும் இடையில் ஒருமைப்பாடு கிடையாது.

**செச்சின்யா**

செச்சின்யாப் பிரச்சினையில், செச்சின்யா மீதான ரஷ்யாவின் ஆதிக்க உரிமையை அமெரிக்கா அங்கீகரிக்கிறது. ஆனால் இப்பிரச்சினையை ரஷ்யா யுத்தம் மூலம் அணுகுவதை அமெரிக்கா எதிர்க்கிறது.

கடந்த வாரம் மாஸ்கோவில் நடைபெற்ற உலக மகா யுத்த வெற்றி விழாக் கொண்டாட்ட ஆரம்ப நாள் நிகழ்ச்சிகளை அமெரிக்காவும் சில மேற்கு நாடுகளும் பகிஷ்கரிப்பதற்கு செச்சினயா விவகாரமே காரணமாக இருந்தது.

எனினும் ஜனாதிபதி பில் கிளின்ரன் முக்கிய நிகழ்ச்சிகளில் பங்கு பற்றி பொறிஸ் யெல்ட்சினுடன் உச்சி மாநாட்டையும் நடத்தி இருந்தார்.

கெடுபிடி யுத்தம் உச்சக் கட்டத்தில் இருந்த காலத்தில் அமெரிக்கா— ரஷ்யத் தலைவர்கள் சந்திப்பு மிகவும் அபூர்வமாகவே இடம்பெற்று வந்தது. ஆனால் பில்கிளின்ரனும் பொறிஸ் யெல்ட்சினும் தற்போது 6 ஆவது தடவையாகச் சந்தித்து விட்டனர்.

செச்சின்யாப் பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண வேண்டும் என்று அமெரிக்கா கோருகிறது.

ஆனால் ரஷ்யா தலைநகர் குறொஸ்னியையும் ஏனைய பகுதிகளையும் தனது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்த பின்பே பேச்சுவார்த்தைக்கு அழைப்பு விடுத்துள்ளது. இதனை செச்சின்ய பிரிவினைவாதத் தலைவர்கள் ஏற்காததில் வியப்பில்லை.

செச்சின்யாவை நழுவ விட்டால் ரஷ்யாவின் தென் பிராந்தியம் முழுவதும் படிப்படியாக நழுவிவிடும் என்று ரஷ்யா அஞ்சுகிறது.

> நேட்டோவை அமெரிக்கா விஸ்தரிப்பது தன்னை தனிமைப்படுத்திவிடும் என்று ரஷ்யா அஞ்சுகிறது.

**நேட்டோ விஸ்தரிப்பு**

ரஷ்யவுக்கும் அமெரிக்காவுக்கும் இடையில் நல்லுறவு நிலவுவதற்கு முக்கிய தடையாக இருப்பது நேட்டோ விஸ்தரிப்பாகும்.

கம்யூனிசம் பரவுவதை தடுத்து நிறுத்தும் நோக்கத்துடனும் சோவியத் யூனியனதும கிழக்கு ஐரோப்பிய நாடுகளினதும் ராணுவ பலத்தை எதிர்கொளளும் நோக்கத்துடனும் நேட்டோ அமைப்பு உருவாக்கப்பட்டது.

நேட்டோ அமைப்புக்கு எதிராக சோவியத் யூனியனால் ஏற்படுத்தப்பட்டது தான் வார்ஸோ அமைப்புகள் ஆகும்.

சோவியத் யூனியன் சிதறுண்டு போனதோடு வார்ஸோ அமைப்பும் இருந்த இடம் தெரியாது போய்விட்டது.

வார்ஸோவில் அங்கம் வகித்த கிழக்கு ஐரோப்பிய நாடுகள் பல நேட்டோவில் இணைய தற்போது விரும்புகின்றனர்.

எதிர்காலத்தில் ரஷ்யாவின் ஆதிக்கத்துக்கு இந்த நாடுகள் அஞ்சுவதே இதற்குக் காரணம்.

கிழக்கு ஐரோப்பிய நாடுகளையும் இணைத்து நேட்டோவை விஸ்தரிப்பதற்கு அமெரிக்கா திட்டமிட்டு வருகிறது கிழக்கு ஐரோப்பிய நாடுகள் நேட்டோவில் இணைந்து விட்டால் ரஷ்யா தனித்துவிடும்.

இதனால் தான் புதிய உலக பாதுகாப்புமுறை (New Global security system) ஒன்றை பொறிஸ்யெல்ட்சின் கோருகிறார்.

எதிர்காலத்தில் கம்யூனிசம் மீண்டும் தலையெடுப்பதைத் தடுப்பதற்கு நேட்டோ விஸ்தரிப்பு அவசியம் என்று அமெரிக்கா கருதுகிறது.

இதே போன்று பொஸ்னியப் பிரச்சினையிலும் அமெரிக்காவும் ரஷ்யாவும் இரண்டுபட்டு நிற்கின்றன பொஸ்னியப் பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்காக அமைக்கப்பட்ட ஐந்து நாடுகள் குழுவில் அமெரிக்காவும் ரஷ்யாவும் அங்கம் வகிக்கின்ற போதிலும் பிரசசினைக்குத் தீர்வு காண்பதில் இரு நாடுகளும் முரண்பட்டு நிற்கின்றன.

> ரஷ்யாவை நசுக்கிவிட்டால் உலக நாடுகளில் தான் ஆதிக்கம் செலுத்தலாம் என்று அமெரிக்கா கருதுகிறது.

கெடுபிடி யுத்த காலத்தில் ஐ நாவை செயல் இழக்க வைததிருந்தது, வல்லரசுகளிடம் இருந்த வீட்டோ அதிகாரம் ஆகும்.

பொஸ்னியப் பிரச்சினையில் ரஷ்யா தனது வீட்டோ அதிகாரத்தைப் பயன்படுத்தி இருப்பது. ஐ. நாவின் எதிர்காலப் பணிகளை கேள்விக்கிடமாக்கி உள்ளது.

அது மட்டும் அல்ல ஐரோப்பிய ஆயுத ஒப்பந்தம் ஒன்றைக் கைவிடப் போவதாகவும் ரஷ்யா மிரட்டி வருகிறது.

இரண்டாவது உலக மகா யுத்தம் முடிவடைந்த பின்னர் நீண்ட காலம் உலகில் நிலவிய கெடுபிடி யுத்தம் 1989—90 களில் சோவியத் யூனியனின் வீழ்ச்சியுடன் அஸ்தமனமானது.

மிகக் குறுகிய கால இடைவெளியின் பின்னர் தற்போது மீண்டும் கெடுபிடி யுத்தத் சாயல் தென்பட ஆரம்பித்துள்ளது. ★

- சஞ்சாரன் -

---


சென். ஜோன்ஸ் கல்லூரி
யாழ்ப்பாணம்.

ஆண்டுப் பரிசளிப்பு விழா

அழைப்பு

காலம்: 27 05-1995
நேரம்: காலை 9-30 மணி
இடம்: பீற்றோ ஞாபகார்த்த மண்டபம்

பிரதம அதிதிகள்
வைத்திய கலாநிதி
து. வி. ஜெயகுலராஜா
(மருத்துவ அத்தியட்சகர், யாழ்ப்பாணம் தனியார் வைத்தியசாலைகள், ஆனைப்பந்தி)
&
திருமதி கிறிஸ்டினா ஞானதிலகராணி ஜெயகுலராஜா

பெற்றோர், பழைய மாணவர், நண்பர்கள்
★ அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம் ★

அதிபர், ஆசிரியர், மாணவர்.
(சி/1178)



உ

வாழ்த்துகின்றோம்

அகில இலங்கைக் கம்பன் கழகத்தின்
15 ஆண்டு நிறைவுக்
கம்பன் விழாவில்

மூதறிஞர்கள் எனக் கௌரவம் பெற்ற
காரைநகர் தமிழ் வளர்ச்சிக் கழகத் தலைவரும் மணிவாசகர் சபை தாபகரும், போஷகருமான பண்டிதர்

க. வைத்தீசுவரக் குருக்கள்
அவர்களையும்

காரைநகர் மான்மியம் நூலின் ஆசிரியருமான மகாவித்துவான்

எப். எக்ஸ். ஸி. நடராசா
அவர்களையும்

இவர்களைக் கௌரவித்த
அகில இலங்கை கம்பன் கழகத்தினரையும்
திரிகரண சுத்தியுடன் வாழ்த்துகின்றோம்

காரைநகர் மணிவாசகர் சபை.
(36629)



சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி
பழைய மாணவர் சங்கம்

பொதுக் கூட்டம்

டிறிபேக் கல்லூரி பழைய மாணவர் சங்கப்பொதுக் கூட்டம் எதிர்வரும் 28 - 05 - 1995 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10-00 மணிககு கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.

பழைய மாணவர்கள் அனைவரையும் தவறாது இக் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மு. நாகேந்திரராசா — தலைவர்.
எஸ். கந்தசாமி — செயலாளர்.

பழையமாணவர் சங்கம்
டிறிபேக் கல்லூரி
(8540)



நிரு ரியூசன் சென்ரர்
ஸ்ரேசன் றோட், கோண்டாவில்

A/L 97

தூய கணிதம்
பிரயோககணிதம் ) திரு. கமலசிங்கம்

ஆரம்பம்: 15-05-95
[திங்கள் பி. ப. 4மணி]

(சி/1207)



யாழ் இந்து பழைய மாணவர் சங்கம்
நடத்தும்

முழுநிலா நாட் கருத்தரங்கு

காலம்: இன்று [14 – 05 – 1995] ஞாயிறு மாலை 3-00 மணி
இடம்: கல்லூரி குமாரசாமி மண்டபம்

கருத்துரை 1.
ஜேர்மன் தேர்தல் முறை
ஒரு கண்ணோட்டம்
பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை
(கலைப்பீடாதிபதி யாழ். பல்கலைக்கழகம்)

கருத்துரை 2.
வெண்ணிலை வாதத்திற்கு
உயிரியல் இலக்கணம்
ஒரு தீர்மானிப்புக் காரணியா?
திரு. G. M. செபஸ்தியாம்பிள்ளை
(முதுநிலை விரிவுரையாளர், சமூகவியல்துறை யாழ். பல்கலைக்கழகம்)

✶ ஆர்வலர் அனைவரையும்
அன்புடன் அழைக்கிறோம். ✶

செயலாளர்,
யாழ். இந்து
பழைய மாணவர் சங்கம்.
[சி-1218]



முதலாவது
பிறந்தநாள் வாழ்த்து

14-05-1995



★ செல்வன் பிரணவன் ★

மூனாமலை லேன், மானிப்பாய் சிவபாதசுந்தரம் விஜயலட்சுமி தம்பதிகளின் செல்வப் புதல்வன் பிரணவன் தனது முதலாவது பிறந்த தினத்தை 14 – 05 – 1995 கொழும்பில் தனது இல்லத்தில் வெகுவிமரிசையாக கொண்டாடுகின்றார். பிரணவ குட்டியை அப்பா, அம்மா, மானிப்பாய் அம்மம்மா, கண்டாபெரியம்மா குடும்பத்தினர், மானிப்பாய் பெரியம்மா குடும்பத்தினர், கொழும்பு மாமா குடும்பத்தினர் ராணி அக்கா, தொட்டம்மாகுடும்பத்தினர். அனைவரும் மருதடியான் அருளுடன் பல்கலையும் கற்று சகல சௌபாக்கியங்களும் பெற்று நீடூழி வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

தகவல்:
— அம்மம்மா.

மூனாமலை,
மானிப்பாய்.


**வெளியீட்டுவிழா**

யாழ்ப்பாணம், மே 14

நோயாளர் நலன்புரிசங்கத்தின் ஆதரவில் நூற்றாண்டு மலர் வெளியீட்டு விழா இன்று ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10மணிக்கு பருத்தித் துறை ஆதார வைத்தியசாலை விரிவுரை மண்டபத்தில்நடைபெறும். (இ-14)

**புலிகளின் குரல் வானொலியில்**

14 5 1995

ஞாயிறு இரவு

- ★ 8-02 — இசையரங்கம்— திரு. கே என். இராஜரட்ணத்தின் வயலின் கச்சேரி
- ★ 8-30— செய்திகள்
- ★ 8-40 — தொடர் நாடகம்— கருணைரவி எழுதும் ''காணி நிலம் வேண்டும்'' அங்கம் – 10

15 — 05 — 1995

திங்கள் காலை

- ★ 7-02 — மாவீர வணக்கம்
- ★ 7-15— நீங்கள் கேட்டவை
- ★ 7-30 — செய்திகள்
- ★ 7-35 — பத்திரிகைச் செய்திகள்
- ★ 7-40— நீங்கள் கேட்டவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி

**தமிழீழ வானொலியில்**

ஞாயிறு மாலை

- ★ 5-01 — சிந்தனைச் சிதறல்
- ★ 5-02 — எழுச்சிகீதம்
- ★ 5-10 புதியவை
- ★ 5-15— மழலைகளுக்காக
- ★ 5-30 - கதம்பம்
- ★ 6-00 — சிந்தனைக்குச் சில விநாடிகள்
- ★ 6-02— உங்கள் தெரிவு


இரண்டாம் ஆண்டு
நினைவஞ்சலி



அமரர் குலசிங்கம் சிவகுமார்
(89/90 கல்வியாண்டு, பௌதீக விஞ்ஞான பிரிவு மாணவன், யாழ். பல்கலைக்கழகம)

அன்னையின் அரவணைப்பில்! 10 — 06 — 1967
ஆண்டவன் அரவணைப்பில்! 14 — 05 — 1993

பாசமுடன் எம்முடனே பழகி வந்த நாட்களை
நேசமுடன் எந்நாளும் நினைந்து வாழ்கிறோம்
ஆண்டு இரண்டு சென்றாலும் அகலாது உன் நினைவு
மீண்டொருகால் வந்திங்கு மனந்திறந்து பேசாயோ!

நண்பர்கள்,
யாழ் பல்கலைக்கழகம்.
(36638)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
392/2 காங்கேசன் வீதி? யாழ்ப்பாணம்

## குருதிக்கொடை அளிப்போம்!

விடிவு வேண்டி போராடிக் கொண்டிருக்கிறது எமது தமிழினம்.

தமது உரிமை வேண்டி அஹிம்சை வழியில் போராட முயன்ற எமது இனம், அஹிம்சையின் தாற்பரியம் பேரினவாதிகளுக்குப் புரியாமல் போகவே அவர்களுக்குப் புரியும் மொழியில் — ஆயுதம் ஏந்தி — போராட்டத்தை தொடர்ந்து இன்று அதில் கணிசமான அளவு முன்னேறியிருக்கிறது.

பேரினவாதப் படையை தரையில் நகருவதற்கு தடை விதித்த எமது விடுதலைப் படை அந்தத் தடையை இப்போது வானுக்கும் கடலுக்கும் விஸ்தரித்து நிற்கின்றது.

இந்த உன்னத விடுதலைப் போரில் தம் இன்னுயிரை ஈந்த போராளிகள் பலர் அவர்களின் ஈகத்துக்கு ஈடேதுமில்லை.

இவ்வாறு போராளி இளைஞர்களின் ஈகத்திலே ஒரு விடுதலைப் போர், விஸ்தரிப்புப் பெற்ற, வீறுநடை போட தமிழ் மக்களும் சமுதாயமும் அதைப் பார்த்துக் கொண்டு வாளாவிருக்க முடியுமா?

இது எமது இனத்துக்காக — எமது இனத்தின் அடுத்த சந்ததிக்காக — நடக்கும் விடுதலைப் போராட்டம். எனவே இதில் எமது இனத்தின் முழுப் பங்களிப்பும் அவசியம். அவ்வாறு முழு சமூகமும் முழு மூச்சுடன் களத்தில் குதித்தால் தான் எமது அடுத்த தலைமுறையேனும் நிமிர முடியும்.

ஒவ்வொருவரும் தத்தமது இயலுமைக்கு ஏற்ப போராட்டத்தில் இணைய முடியும்.

மனவலுவும் உடல்வலுவும் உள்ளவர்கள் நேரடியாகப் போர் முனைக்குச் செல்ல முடியும்; அல்லது துணைப் படையில் இணைய முடியும்.

இவற்றைச் செய்ய முடியாதவர்கள் வேறு வழிகளில் விடுதலைப் போருக்கு தம் பங்களிப்பைச் செய்வதற்கு இடமுண்டு.

போராட்டத்துக்கு துணை நிற்கும் சேவைகளில் ஒன்று குருதிக்கொடையளித்தல்.

பொருளாக, நிதியாக, செயலாகப் போராட்டத்துக்கு பல வழிகளில் உதவுவது போல உடலால் — உடல் இரத்தத்தால் — உதவும் வழி இதுவாகும்.

போரில் காயமடையும் நோயாளிகளுக்கும், போரால் நலிவுற்றுள்ள எமது சமூகத்தில் நோய்த்தவர்களுக்கும் குருதிக் கொடையளித்தல் ஒரு பெரும் தொண்டாகும்; மனித நேயப் பணியாகும். அதன்சிறப்பை வெறும் வார்த்தைகளால் வர்ணித்து விட முடியாது.

போரில் போராளி சிந்தும் குருதிக்காக —

எமது சமூகத்தில் நோயுற்ற ஒருவருக்காக —

எமது உடலிலிருந்தே குருதியைச் சொரிந்து தர்மம் செய்ய — எமக்குக் கிடைக்கும் வாய்ப்பை ஒரு பேறாக நாம் கருத வேண்டும்.

18 முதல் ஐம்பது வயதுடைய — நோயற்ற — ஆண், பெண் இரு பாலரும் குருதிக் கொடையளிக்கலாம். ஆறு மாதங்களுக்கு ஒரு தடவையோ அல்லது வருடம் தோறுமோ குருதிக்கொடை வழங்கலாம்.

குருதிக்கொடை அளிப்பதால் கொடை அளிப்பவருக்கு பாதகம் ஏதும் ஏற்படமாட்டாது என்பது மருத்துவ ரீதியான ஆய்வுகளின் திட்டவட்டமான முடிவாகும்.

ஆகவே எமக்கு பெரிய இழப்பு ஏதுமின்றி நாம் செய்யக் கூடிய சிறப்புமிகு ஈகம் இதல்லவா? இதனைச் செய்ய நாம் பின்னிற்கவும் வேண்டுமா?

இத்தகைய ஒரு நல்ல செயலையும் அதன் பயனையும் மக்களுக்கு எடுத்துக் கூறி, குருதிக் கொடையை ஒரு திட்டமிட்ட அமைப்பு ரீதியான ஏற்பாட்டின் கீழ் செயற்படுத்த நோயாளர் நலன்புரி சங்கம் நடவடிக்கை எடுத்திருப்பது பாராட்டுக்குரியது.

அவர்களின் ஏற்பாட்டின் கீழ் குருதிக்கொடை அளித்து வரும் பொதுமக்களும் பாராட்டப்பட வேண்டியவர்களே!

இத்தகைய கொடையாளிகளைப் பாராட்டுவதும் அது பற்றி சமூகத்துக்கு எடுத்துரைப்பதும் பொதுமக்களை குருதிக் கொடையளிக்கத் தூண்டுவனவாக அமையும். அந்த வழியில் நோயாளர் நலன்புரி சங்கம் கடந்தவாரம் நடத்திய பாராட்டு விழா வரவேற்கத்தக்கதாகும்

# இராணுவத் தீர்வுக்கே அரசு தயாராகிறது

# வெளிநாடுகளிடமிருந்து ரகசிய உதவிகள்

போருக்குத் திட்டவட்டமான பதில், போராகவே இருக்க வேண்டும். அதற்குத் தேவையான ஆற்றலும், திடசங்கற்பமும் அரசிடம் உள்ளன. நடக்கக்கூடாத எதுவும் நடந்துவிடுவதைத் தவிர்ப்பதற்காக பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருக்கிறது. அதற்கான சகல நடவடிக்கைகளும் எடுக்கப் பட்டுள்ளன.—

விடுதலைப்புலிகளின் அச்சுறுத்தலை எதிர்கொள்வதற்கான திட்டம் ஒன்றை அரசாங்கம் தயாரித்துள்ளது. பாதுகாப்புக் காரணங்களுக்காக அந்தத் திட்டம் பற்றிய விவரத்தை உடனடியாக வெளியிட முடியாது —

அரசு அதன் எந்தப்பிரிவு மக்களுடனும் போர் தொடுக்க நிச்சயமாக விரும்பவில்லை. சமூகத்தின் நலனுக்கு சமாதான வழிமுறைகளே சிறந்தவை என்ற கொள்கையில் அரசு அசையாத நம்பிக்கை கொண்டுள்ளது. அவ்வப்போது எந்தவிதமான முட்டுக்கட்டைகள் உருவாகினாலும் அரசு இந்தக் கொள்கையைக் கடைப்பிடிக்கும்.—

பாதுகாப்புப் பிரதி அமைச்சர் கேணல் அனுருத்த ரத்வத்த நேற்று முன் தினம் நாடாளுமன்றத்தில் ஆற்றிய முக்கிய உரையில் இவ்வாறு பேசியிருக்கிறார்.

அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான மோதல் தவிர்ப்பு ஒப்பந்தம் முறிந்த பின்னர்

அரசியல் நிலைப்பாட்டை வெளிப்படுத்தும் முக்கிய உரையாக பிரதி அமைச்சர் அனுருத்த ரத்வத்தையின் பேச்சு அமைந்தது எனலாம்.

மோதல் தவிர்ப்பு முறிந்து போனதால் அரசாங்கம் இனிமேல் என்ன செய்யப் போகிறது? அதன் திட்டம் என்ன என்பதனை அறிவதில் சிங்கள மக்கள் மட்டும் அக்கறையாக இருக்கவில்லை. எதிர்க்கட்சி அரசியல்வாதிகள் மட்டும், "அரசே! உனது அடுத்த திட்டம் என்ன"? என்று கேள்வி கேட்டுக் குடையவில்லை.

அரசாங்க எம். பிக்களே அரசாங்கத்தின் அடுத்த திட்டம் என்ன என்று தங்களுக்குள் கேட்டுக் கொண்டிருந்த

## போரை நடத்திக் காட்டி கட்சியில் முன்னுக்கு வர அனுருத்த ஆசை

வேளை. தங்கள் தொகுதிகள் மாவட்டங்களைச் சேர்ந்த படை வீரர்களின் சடலங்களும், அஸ்திகளும் வடக்கிலிருந்தும், கிழக்கிலிருந்தும் சென்றடைந்ததால் அரசாங்கத்தின் மீது ஆத்திரமுற்றிருக்கும் அவர்களின் உறவினர்களுக்கும் தொகுதி வாழ் கட்சி ஆதரவாளர்களுக்கும் என்ன பதில் கூறுவது என்பது தெரியாமல் திணறியவர்கள் அவர்கள். நாடாளுமன்றத்திலாவது தமக்குபதில் கிடைக்கும் என எதிர்பார்த்து இருந்

யைக் கடைப்பிடிக்கும் என்று பம்மாத்துக் கதை பேசுகிறார்! போர் என்றால் போர் என்று 1983 ஆம் ஆண்டில் ஜே. ஆர். முழங்கிய தால் கடந்த 12 வருட காலப்

### அரசியல்

போரின் விளைவுகளைச் சிறிதும் உணர்ந்து கொள்ளாமல் புதிய அரசும் அதே வழியில் செல்ல முனைகிறது.

### இராணுவத் தீர்விலேயே நம்பிக்கை

தற்போதுள்ள துரதிர்ஷ்டவசமான யதார்த்தம் போர் ஆகும். அந்தப் போரில் சந்

தேகம் இன்றி எமக்கு வெற்றி கிடைக்கும். அந்த வெற்றி கௌரவமான, திருப்தியான நிரந்தரமான தீர்வு ஒன்றைக் காண்பதற்கு ஓர் ஆதாரம் மட்டுமே என்பது எமது நம்பிக்கையாகும்.— என்று பிரதி அமைச்சர் தெரிவித்திருப்பது இராணுவத் தீர்வில் அரசு எந்தளவுக்கு நம்பிக்கை வைத்திருக்கிறது என்பதனை வெகு தெளிவாகப் புலப்படுத்துகிறது. ஆனால் அதனை மூடிமறைப்பதற்கு, சமாதானத்தைக் காணும் தனது இலட்சியத்துக்காக அரசு உழைக்கும் என்றும் அடிக்கடி பூசி மெழுகிக் கொண்டார் ரத்வத்த.

ஆனால் போருக்கான அரசின் திட்டம் என்ன என்பதனை மட்டும் அவர் வெளியிடவில்லை. அது இரகசியமானது, இப்போதைக்கு வெளியிட முடியாதது என்று கூறி தட்டிக் கழித்து விட்டார்.

போரை நடத்த வேண்டும் என்பதில் அரசாங்கத் தரப்பில் முன்னுக்கு நிற்பவர் அமைச்சர் அனுருத்த ரத்வத்த. சந்திரிகா வெளிநாட்டில் இருந்த வேளை நாட்டை போர் நிலையில் வைத்திருக்க வேண்டும் என்று அமைச்சரவையில் கருத்துத் தெரிவித்து அதனைச் செயலாக்கவும் முனைந்தவர் இதே அனுருத்த தான்.

ஆனால் அமைச்சர்களில் பலர் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்ததால், அவரால் தாம் நினைத்த மாதிரி எதனையும் செய்ய இயலவில்லை. போரைத் தீவிரமாக நடத்த வேண்டும் என்பதில் அவர் காட்டும் ஆர்வம் அளவற்றது.

பாதுகாப்புப் பிரதி அமைச்சர் என்ற கோதாவில் மட்டுமன்றி, தனிப்பட்ட முறை

யிலும் அவர் மிகுந்த போர்க் குணம் உள்ளவராக இருக்கிறார். அவர் படை அதிகாரியாக இருந்தமையால் அந்தக் குணம் அவரிடம் இயல்பாகவே குடிகொண்டிருக்கும் என எதிர்பார்க்கலாம்.

### அனுருத்தவின் ஆசை

அதற்குப் புறம்பாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில், சந்திரிகாவுக்கு அடுத்து தலைமைப் பதவியை தான் பிடித்துவிட வேண்டும் என்ற ஆசையும் அவருக்கு வந்திருக்கிறது. அதனால் போர் ஒன்றை நடத்திக் காட்டி அதன் மூலம் தனது செல்வாக்கை உயர்த்தி முன்னுக்கு வர நினைத்திருக்கலாம்.

போர் முனையில் இப்போது தோன்றியுள்ள புதிய நிலையை எதிர்கொள்வதற்கு அரசாங்கம் வெளிநாடுகளின் உதவிகளைக் கோரி வருகிறது. அமைச்சர் அனுருத்தவோ உத்தியோக ரீதியில் மட்டுமன்றி தனிப்பட்ட முறையிலும் வெளிநாடுகளிடம் இந்த உதவியைக் கேட்டு வருவதாகக் கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

உத்தியோக ரீதியில் இராணுவ உதவி வழங்காவிடினும் இரகசியமாக அரசுக்குத் தேவையான உதவிகளை வழங்குவதில் வெளிநாடுகளை இணங்க வைப்பதில் இவர் தீவிர முயற்சிகளை மேற்கொண்டு வருகிறாராம்.

மோதல் தவிர்ப்பு ஒப்பந்தம் முறிந்து பேச்சுவார்த்தைகள் நின்று போவதற்கு முன்னரே, படைகளை போருக்குத் தயாராக உஷார் நிலையில் இருக்குமாறு உத்தரவிட்டவர் அனுருத்த. எனவே அவர் தமது தலைமையில் போர் ஒன்றை நடத்திப் பார்க்க விரும்புவது எதிர்பார்க்கப்பட வேண்டிய ஒன்று தான்!

### கை, கால் கட்டப்பட்ட நிலையில்

போர்க் களத்தை எடுத்துக் கொண்டால் வடக்கில் முப்படைகளும் முடங்கிய நிலையில் உள்ளன. கிழக்கில் அரசாங்கப் படைகளுக்கு சவால் விடும் வகையில் விடுதலைப் புலிகள் அதிரடித் தாக்குதல்களை நடத்தி வருகிறார்கள். வடக்கு-கிழக்குத் தவிர்ந்த ஏனைய பிரதேசங்களிலும் விடுதலைப் புலிகள் அதிரடிகளை நடத்தக் கூடும் என்ற அச்சம் அரச படைகளுக்கும், அரசாங்கத்துக்கும் உண்டு.

அதாவது நாட்டின் சகல

பகுதிகளிலும் விடுதலைப்புலிகளின் தாக்குதல்களுக்கு முகம் கொடுக்கவேண்டிய நெருக்கடி அரசுக்குத் தோன்றியுள்ளது. ஆனால் வடக்கில் மூன்று படைகளினதும் கைகளும், கால்களும் கட்டப்பட்ட நிலை உருவாகியுள்ளது. இந்தக் கைக்கட்டு கால் கட்டுகளை அவிழ்த்து, படையினரை நிலைப்படுத்தி உறுதிப் படுத்த வேண்டும்.

வடக்கில் துருப்புகளை நகர்த்தக் கூடிய தளநிலைமை இல்லை என்பதனை இங்குள்ள இராணுவ அதிகாரிகள் அரசுக்குத் தெரியப்படுத்தி உள்ளனர்.

அதனாலேயே அரசாங்கம் வெளிநாட்டு இராணுவ உதவி பெற்றுப் போரைத் தொடங்க விரும்புகிறது. எவ்வளவு பணத்தைச் செலவு செய்தாலும், எந்த வகை நவீன ரக ஆயுதங்கள் தளபாடங்களைக் கொண்டு வந்தாலும், அரசாங்கப் படைகள் தனித்து நின்று போரை எப்படி முன்னெடுப்பது என்பது குறித்து அரசு இன்னும் தீர்க்கமான முடிவு எடுத்திருக்க முடியாது. வெளிநாட்டு உதவி எந்தளவு, எந்த வகையில் கிடைக்கும் என்பது தெரிந்த பின்னரே அது ஒரு முடிவுக்கு வரும் என எதிர்பார்க்கலாம்.

### இரகசிய உதவி பெற முயற்சி

வேறு ஒரு நாடு, இப்பிரச்சினையில் தலையிடக் கூடியதாக அதனை மறைமுகமாக ஆத்திர மூட்டும் தந்திரத்தில்

போல —

மக்களைப் பாதுகாப்பதற்கான, போருக்கான திட்டம் எம்மிடம் உண்டு, பாதுகாப்புக் காரணம் கருதி அதனை வெளியிட முடியாது — என்றும் அரசாங்கம் கூறுகிறது.

உண்மையில் இரண்டு விடயங்களிலுமே அரசு இரகசியமாகவும், உள்ளந்தரங்கமாகவும் தனது நோக்கங்களை அடைய விரும்புகிறது என்பதே உண்மை. அதன் பொருட்டு சர்வதேச ஆதரவைத் தனது பக்கம் வைத்துக் கொள்ள முயற்சிக்கிறது. சமாதானம் – போர் ஆகிய விடயங்களில் சர்வதேச அபிப்பிராயம் தமது பக்கமே இருப்பதாகவும் அரசாங்கம் கூறிக் கொள்கிறது. அதற்கேற்ற வகையில் தனது பிரசாரத்தை முடுக்கி விட்டிருக்கிறது.

தென்னாசிய நாடுகள், மேலைத்தேச நாடுகள், வட அமெரிக்க நாடுகள், ரஷ்யா போன்ற நாடுகள் இலங்கையில் இப்போது தோன்றியுள்ள நிலை குறித்து கவலையும், அதேவேளை அக்கறையும் காட்டுவதால் —

அவர்களின் அந்த ஆதரவை போரை வெல்வதற்கான செயலாக்கி, வேண்டிய உதவிகளைப் பெறுவதற்கு முழு மூச்சாக அரசு உழைக்க வேண்டும் என்று — அரசாங்கத்துக்கு ஆலோசனை கூறப்பட்டதாகத் தகவல்கள் தெரி

### சமாதான முயற்சி தோற்றதை மறைத்து மழுப்பும் தந்திரம்

விடுதலைப் புலிகள் மூன்று வாரங்களில் நடத்திய தாக்குதல்களில் 225க்கும் அதிகமான படையினரையும் அதிகாரிகளையும் இழந்த நிலையில் —

வடக்கில் உள்ள இராணுவ முகாம்களில் உள்ள இராணுவத்தினருக்கு ஆயுத தளபாடங்களை மட்டுமன்றி உணவு மற்றும் தபால்களைக் கூட விநியோகிக்க முடியாதவாறு வான் வழி, கடல்வழித் தடைகள் ஏற்பட்டுள்ள பின்னணியில் —

அரசின் — இராணுவத்தின் — பூரண கட்டுப்பாட்டுக்குள்ளேயே இருப்பதாகக் கூறப்பட்ட கிழக்கில் விடுதலைப் புலிகள் நடத்தும் தாக்குதல்களால் அரச படைகள் நிலைகுலைந்து போயுள்ள இக்கட்டான சூழ்நிலையில் — நாடாளுமன்றம் நேற்று முன் தினம் வெள்ளிக்கிழமையே முதன் முதலில் கூடியது.

### பலரும் ஆவலுடன் எதிர்பார்த்தனர்

வடக்கு - கிழக்கிலும் மற்றும் அதன் சில எல்லைப் பகுதிகளிலும் நடைமுறையில் உள்ள அவசரகாலச் சட்டத்தை நீடிப்பதற்கான பிரேரணையை நிறைவேற்ற வேண்டிய நாளாகவும் அது அமைந்தது சந்தர்ப்பவசமானதாகும்.

ஆகையால் அரசாங்கத்தின்

தாரிகள். ஆனால் பிரதி அமைச்சர் ரத்வத்தையின் பேச்சு அவர்கள் எதிர்பார்த்த பதிலைக் கொடுக்கவில்லை. அந்தத் திட்டத்தை வெளியிட முடியாது என்று கூறி தமது அரசாங்கக் கட்சி எம். பிக்களையே ஏமாற்றி விட்டார்!

### அரசின் கொள்கை அறிக்கை

அமைச்சர் ரத்வத்தையின் பேச்சை, அவரது பேச்சாக மட்டும் எடுத்துக் கொள்ள முடியாது. இப்போதைய நிலை குறித்த அரசின் கொள்கை அறிக்கையாகவும், பாதுகாப்பு அமைச்சரும் ஜனாதிபதியுமான சந்திரிகாவின் சார்பில் சமர்ப்பிக்கப் பட்ட அறிக்கையாகவும் கொள்ளலாம்.

உரை என்ற பெயரில் பிரதி அமைச்சர் ரத்வத்த நாடாளுமன்றத்தில் வாசித்த அந்த அறிக்கையை முழுமையாகப் படித்தால், சமாதானத்தை அடைவதில் தனக்கு ஏற்பட்ட தோல்வியை, அல்லது இயலாத் தன்மையை, சிங்கள மக்களுக்கும், சர்வதேச உலகத்துக்கும் மறைக்கவும், மழுப்பவும் சமாளிக்கவும் அரசு எவ்வாறு முயல்கிறது என்பது நன்றாகப் புரியும்!

போர் என்றால் போர் என்ற ஜே ஆரின் நிலைப் பாட்டை எடுத்துக் கொண்டு அரசு சமாதானக் கொள்கை

### பாதுகாப்புத் திட்டம் தெரியாமல் அரச எம். பிக்களே ஏமாற்றம்

கூட ஸ்ரீலங்கா இறங்கினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை தான் நடத்திய ஆத்திரமூட்டலை விடுதலைப் புலிகளின் தலைமேல் சுமத்தி வெளிநாடு ஒன்றை இங்கே இழுக்கவும் அது திட்டமிடலாம்.

இந்தியாவிடம் இருந்து இரகசியமாக சில உதவிகளைப் பெற அரசு செய்துள்ள முயற்சிகள் உரிய பயனளிக்காவிடில், அதற்கு ஆத்திர மூட்டி இப்பிரச்சினையில் அதனை தலையிடத் தூண்டும் உத்தியையானப்படலாம் என்று சொல்லப்படுகிறது.

எனினும் அந்தளவுக்குச் செல்வதற்கு முன்னர் மறைமுக உதவிகளைப் பெறுவது முதலாவது கட்டமாக இருக்கும்.

விடுதலைப் புலிகளின் கடற்படைப் பலத்தைக் குறைப்பதற்கு இந்தியா உதவுவதற்கு தாராளமாகமுன்வரும் குறிப்பாக பாக்குநீரிணைப் பகுதியில் இந்தியா கடற் கண்காணிப்பு நடத்தும் சாத்தியம் உண்டு என்று சொல்லப்படுகிறது.

இனப்பிரச்சினைக்கு உரிய தீர்வுத் திட்டம் எம் வசம் உள்ளது. அதனை வெளியிட்டால் சிங்கள மக்கள் கலவரம் செய்வார்கள் என்று கூறியது

விக்கின்றன.

அந்த ஆலோசனையை ஏற்று அரசாங்கம் காரியத்தில் இறங்கியிருப்பதாகவும் சொல்லப்படுகிறது.

தனது இலட்சியம் சமாதானமே என்றும்; ஆனால் போர் ஒன்றை நடத்தியே சமாதானத்தைக் காண வேண்டிய நிர்ப்பந்தம் தனக்கு

**- உதயகாந்தன் -**

ஏற்பட்டுள்ளதாகவும் வெளிநாடுகளுக்கு கூறி இயன்றளவு உதவிகளைப் பெறுவதற்கு முயற்சிகள் நடைபெற்று வருகின்றன.

உத்தியோக பூர்வமாக உதவி செய்ய முடியாவிடினும், சில புரிந்துணர்வுகளின் அடிப்படையில் உத்தியோகப் பற்றற்ற முறையில் அந்தரங்கமாக அல்லது மறைமுகமாக உதவுமாறு குறிப்பிட்ட சில நாடுகளிடம் கேட்கப் பட்டுள்ளதாம்.

எனவே வெளி உலகத்துக்கு உண்மை நிலையை எடுத்துக் கூறி, தமிழர்களின் விடுதலைப் போராட்டத்தைப் புரிந்து கொள்ளச் செய்ய வேண்டிய பொறுப்பு தமிழர்களுக்கு உண்டு. ★

சூரியகாந்தி
உதயன் ஞாயிறு சிறப்பம்சம்

# இன்றைய நிகழ்ச்சிகள்

மிருதங்க லயமாமணி ம. கந்தசாமியின் மாணவன் செல்வன் குணபாலசிங்கம் ஞானசுதனின் மிருதங்க அரங்கேற்றம் இன்று ஞாயிறு மாலை 4 மணிக்கு அளவெட்டி தெற்கு, நாகேஸ்வரம் ஸ்ரீநாகவரத நாராயணர் தேவஸ்தானத்தில் நடைபெறும். [ஒ-51]

★ ★ ★

யாழ். மாவட்ட ரீதியாக நடைபெற்ற கோலப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் வைபவம் இன்று ஞாயிறு மாலை 3 மணிக்கு நல்லை ஆதீனத்தில் இடம்பெறும்.

ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் ஆதீன பாலர் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வும் இடம்பெறும்.

தொடர்ந்து மாலை 6 மணிக்கு திருஞான சம்பந்த சுவாமி வீதியுலாவும் இடம்பெறும். (க-14)

★ ★ ★

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை நூற்றாண்டு விழாவும், மலர் வெளியீடும் இன்று ஞாயிறு மாலை 4 மணிக்கு நடைபெறும்.

வைத்தியசாலை விரிவுரை மண்டபத்தில் மாவட்ட வைத்திய அதிகாரியின் தலைமையில் நடைபெறவுள்ள இவ்விழாவிற்கான ஏற்பாடுகளை நோயாளர் நலன்புரி சங்கம் மேற்கொண்டுள்ளது.

நோயாளர் நலன்புரி சங்கத் தலைவர் டாக்டர் சிவபாலன் உட்பட பல முக்கிய பிரமுகர்கள் இவ்விழாவில் கலந்து கொள்கின்றனர்.

★ ★ ★

பருத்தித்துறை ஸ்ரீ ராமகிருஷ்ண சேவாச்சிரம் மண்டபத்தில் திருமுறை விழா இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8-30 மணி முதல் நடைபெறும்.

விழாவில் திரு. சி. வேலாயுதம் திருவாசகத்தில் தேன் எனும் பொருளில் உரை நிகழ்த்துவார்; இராமநாதன் இசைக்கல்லூரி பண்ணிசை இணைப்பாளர் திரு. நா. வி. மு. நவரத்தினத்தின் பண்ணிசையும்இடம் பெறும். (க-14)

★ ★ ★

கைதடி மேற்கு சரஸ்வதி சனசமூக நிலையத்தின் 39வது ஆண்டு விழாவை யொட்டி இன்று [illegible] 2 மணிக்கு நிலையத் தலைவர் திரு. க. இ[illegible]

தலைமையில் மெய்வல்லுநர் போட்டி மேற்படி நிலைய மைதானத்தில் நடைபெறவுள்ளது. (ஒ)

★ ★ ★

யாழ். கந்தர்மடம் ஸ்ரீ சிவகுருநாத குருபீட மாதாந்த பூரணைதின சொற்பொழிவு இன்று ஞாயிறு பிற்பகல் 3-30மணிக்கு வேதாந்த மடத்தில் இடம்பெறும்.

யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறை முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி நா. சுப்பிரமணியன் "இன்றைய நோக்கில் சைவ பக்தி இயக்கம்" என்னும் விடயம் குறித்து உரையாற்றுவார். (ஒ)

### கருத்தரங்கு

"அதி இரத்த அமுக்கமும் அதன் பாதிப்புக்களும்" என்பது பற்றிய சுகாதாரக்கருத்தரங்கு ஒன்று இன்று காலை 9மணிக்கு யாழ். ஆஸ்பத்திரி வீதி மத்திய மருந்தக மண்டபத்தில் நடைபெறும்.

யாழ். மாகாணப் பிரதிப் பணிப்பாளர் டாக்டர் வி. சிறிகாந்தா தலைமையில் நடைபெறும் கருத்தரங்கில் [illegible] டாக்டர் ஐ. திரு. நாவுக்கரசு [illegible]

# நல்லூர் கம்பன் விழா இறுதி நாள் நிகழ்வு இன்று

அகில இலங்கை கம்பன்கழகத்தின் 15ஆவது ஆண்டு நிறைவுக் கம்பன் விழாவின் இறுதி நாளான இன்றைய காலை நிகழ்வுகள் 9-30 மணிக்கு பருத்தித்துறை ஹாட்லிக்கல்லூரி அதிபர் திரு. க. நடராசா தலைமையில் ஆரம்பமாகும்.

காலை நிகழ்ச்சியில் "கம்பனின் குறள் விளக்கம்" என்ற பொருளில் ஐயந்தெளி அரங்கம் இடம்பெறும்.

மாலை நிகழ்வுகள் 4-30 மணிக்கு யாழ். பல்கலைக்கழக கலைப்பீடாதிபதி பேராசிரியர் பொ. பாலசுந்தரம் தலைமையில் ஆரம்பமாகும்.

அமரர் ஆசிரியமணி ஆர். ரி. சுப்பிரமணியத்தின் உருவப்படம் திறப்பும் "விஸ்வாமித்திரன் குற்றவாளி" என்ற பொருளில் வழக்காடு மன்றம் மற்றும் கலாவிநோதன் சின்னமணி குழுவினரின் 'அகலிகை சாபவிமோசனம்' வில்லிசையும் இடம்பெறும்.

விழா நிறைவுரையை பேராசிரியர் செ. சிவஞானசுந்தரம் [நந்தி] நிகழ்த்துவார். (ஒ-111)

## பாராட்டு விழா

யாழ்ப்பாணம், மே 14

எழுபதாம் அகவை காணும் அருளிசை மாமணி திரு. வேலுப்பிள்ளை சிவஞானத்தைப் பாராட்டும் விழா ஒன்று நாளை திங்கட்கிழமை மாலை 3-30 மணிக்கு நல்லூர் திவ்விய ஜீவன மண்டபத்தில் நடைபெறும்.

யாழ். செயலக பிரதம [illegible]ளர் திரு. சு. சிவபாலன் பாராட்டு விழாவுக்குத் தலைமை வகிப்பார்.

## பாடசாலை கட்டடம் இடிந்து மாணவர் காயம்

கொழும்பு, மே 14

புத்தளம் மாவட்டத்தில் ஆனைமடுவ பகுதியிலுள்ள பாடசாலை ஒன்றின் கட்டடமொன்று திடீரென இடிந்து விழுந்ததில் அக்கட்டடத்திலிருந்த அதிபர் மற்றும் 12 மாணவர்கள் காயமடைந்தனர்.

நேற்று நடைபெற்ற இச்சம்பவத்தில் கட்டடம் இடியுண்டவேளை 25 மாணவர்களும், அதிபர், ஆசிரியர்களும் அதில் இருந்ததாக தெரிவிக்கப் படுகிறது. [இ-4]

## கலாச்சார விழா

வலிகாமம் தெற்கு, மே 14

வலிகாமம் தெற்கு பிரதேச சபை கலாசார பேரவையினர் உடுவில் உபஅலுவலக திறந்த வெளியரங்கில் நடத்தும் கலை விழாவின் இரண்டாம் நாள் நிகழ்ச்சிகள் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 5மணியளவில் ஆரம்பமாகி நடைபெற உள்ளன.

வலிகாமம் தெற்கு பிரதேச செயலர் திரு ஆ. மகாலிங்கம் தலைமையில் நடைபெறும் இன்றைய நிகழ்வில் —

யாழ் பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலைப்பிரிவுத் தலைவர் கலாநிதி சபா ஜெயராசா பிரதம விருந்தினராகவும் — இயல் இசை வாருதி பிரம்ம ஸ்ரீ. ந. வீரமணி ஐயர், கலைஞர் பொன். கணேசமூர்த்தி ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொள்கின்றனர்.

கலை நிகழ்வுகளில் — இராமநாதன் கல்லூரி மாணவிகளின் நாட்டிய நாடகம் —

இராமநாதன் நுண்கலைப் பிரிவினரின் திரிதாளசங்கமம் சங்கீத பூஷணம் பொன். சுந்தரலிங்கத்தின் இசைக்கச்சேரி —

மானிப்பாய் கலைஞர்கள் பங்கு கொள்ளும் "சொர்க்கம் யாருக்கு" நாடகம் மற்றும் வயலின் சோலோ போன்றவை நடைபெறும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "தீ சுமந்தோர்" பிற்போடப்பட்டுள்ளது

யாழ். பல்கலைக்கழக சமூக விஞ்ஞான மன்றத்தினரின் தீ சுமந்தோர் நாடகம் தவிர்க்கமுடியாத காரணமாக பிற்போடப்பட்டுள்ளது. மேடையேறும் திகதி மிகவிரைவில் அறிவிக்கப்படும்.

தலைவர்
சமூக விஞ்ஞான மன்றம்

[36646]


Near Wellington Junction

UNIKCO
COMPUTER CENTRE
New Batch

| COURSE | DURATION | FEES |
| --- | --- | --- |
| BASIC | 4 Months | 1250/- |
| PASCAL | 4 Months | 1750/- |
| LOTUS 1-2-3 | 3 Months | 2500/- |
| d BASE in PwS | 3 Months | 2500/- |
| WORD PERFECT | 3 Months | 2500/- |

Commencement: 19 – 05 – 95
37, CLOCK TOWER ROAD,
JAFFNA.
(C-1391)


## மரண அறிவித்தல்கள்

### திருமதி இரத்தினேஸ்வரி நவநாதன்

கோண்டாவில் கிழக்கை பிறப்பிடமாகவும், D 8, அண்டர்சன் தொடர்மாடி, நாரகன்பிட்டி கொழும்பை வசிப்பிடமாகக் கொண்டவருமான திருமதி இரத்தினேஸ்வரி நவநாதன் 12-05-95 வெள்ளிக்கிழமை கொழும்பில் காலமானார்.

இவர் திரு நவநாதன் [இளைப்பாறிய களஞ்சியப் பொறுப்பாளர், உணவு இலாகா] அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான கந்தையா [மலாயன் பென்சனியர்] திருமதி பொன்னம்மா ஆகியோரின் சிரேஷ்ட புதல்வியும், திரு திருமதி. செல்லையாவின் அன்பு மருமகளும், சிவகுமார், சாந்தகுமார் [அமெரிக்கா], சுகுமார் [மருத்துவபீட மாணவன் ஸ்ரீ ஜெயவர்த்தன புர பல்கலைக்கழகம்] ஆகியோரின் அன்புத் தாயாரும், சாலினியின் [அமெரிக்கா] அன்பு மாமியாரும், சனனின் அன்புப் பேர்த்தியாரும், சரஸ்வதி, திருநாவுக்கரசு [இளைப்பாறிய யாழ் மாநகரசபை தீயணைப்புச் சேவைப் பொறுப்பாளர்], இராஜேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும், இரத்தினசிங்கம் [இளைப்பாறிய பதில் உதவி ஆணையாளர் மோட்டார் வாகன இலாகா], புஷ்பராணி, பாலசுப்பிரமணியம் [சிரேஷ்ட முகாமையாளர் - மக்கள் வங்கி சர்வதேசப் பிரிவு, கொழும்பு], இராஜசிங்கம் [கொழும்பு], ஜெயதேவி [அமெரிக்கா], செல்வதேவி, ஜெயராஜா [லண்டன்], பாலராஜா [கனடா], தேவராஜா [லண்டன்], புஷ்பதேவி [கொழும்பு] ஆகியோரின் மைத்துனியுமாவார்

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று ஞாயிற்றுக்கிழமை (14-5-95) பிற்பகல் 3-45 மணிக்கு கொழும்பில் நடைபெறும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
திருமதி புஷ்பராணி திருநாவுக்கரசு
[மைத்துனி]
கொக்குவில். [36636]

### ஐயாத்துரை துரைசிங்கம்

புங்குடுதீவு, 2 ஆம் வட்டாரத்தை சேர்ந்தவரும், தற்போது 115/23, நாவலர் வீதி [கார்த்திகேய பாடசாலைக்கு முன்] என்னும் விலாசத்தில் வசித்தவருமான ஐயாத்துரை துரைசிங்கம் நேற்று 13-5-95 இல் காலமானார்.

இவர் காலஞ்சென்றவர்களான ஐயாத்துரை - வள்ளிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும், வல்லிபுரம் - சேதுப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகனும், வள்ளிநாயகியின் பாசமிகு கணவரும், சந்திரகுமார், புஸ்பலதா, விக்னேஸ்வரன், ஜெயக்குமார் (சுவிஸ்), காலஞ்சென்ற உதயகுமார் [மாவீரர் குமரன்], மற்றும் சிவகுமார் [புங்குடுதீவு ப.நோ. கூ. சங்கம்], திவ்வியலதா ஆகியோரின் அன்புத் தந்தையும், ஆனந்தமூர்த்தி, காலஞ்சென்ற துரைராசா மற்றும் கனகரெத்தினம், சுந்தரலிங்கம் (ஜேர்மனி), தணிகாசலம் (பிரான்ஸ்), சோமசுந்தரம் (ஜேர்மனி), கணேசமூர்த்தி (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற செல்வராசா, நடராசா [கனடா], சுப்பிரமணியம் காலஞ்சென்ற நடராசா, புஸ்பமலர் (கனடா), ஆனந்தராசா (கனடா), சிவானந்தன் [கனடா], இரத்தினேஸ்வரி (கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று [14-5 95] மு.ப. 9 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கோம்பயன் மணல் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்
திருமதி. து. வள்ளிநாயகி
(மனைவி)
115/23 நாவலர் வீதி,
யாழ்ப்பாணம் [36644]

# தீர்வுத் திட்டம் ஒன்று தந்தால் அதனைப் பரிசீலிக்கத் தயார்

## மருத்துவ பீட மாணவர் அறிவிப்பு

யாழ்ப்பாணம், மே.14

தனியார் மருத்துவக் கல்லூரியானது, இலவச, திறமை அடிப்படையிலான கல்வி முறைக்கு சவாலாக அமைந்த போதிலும் —

எமது கல்வி பாதிக்காத வகையில் —

அதேவேளை தமிழ்ச் சமுதாயத்தின் மருத்துவ வசதிகளை அதிகரிக்கக் கூடியதான தீர்வுத் திட்டம் ஒன்று சமர்ப்பிக்கப்படுமானால்—

அதனைப் பரிசீலிக்கத் தயாராக இருக்கிறோம்.

இவ்வாறு யாழ். மருத்துவ மாணவர் ஒன்றியம் நேற்று விடுத்த அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளது.

எமது பிரச்சினைகளை நன்கு அறிந்தவர்களும் செயன்முறைப் பயிற்சி வகுப்புகளில் பெரும் பங்கை வகிப்பவர்களுமாகிய அரசினர் வைத்திய அதிகாரிகள் சங்க யாழ் கிளையினர், இப்பிரச்சினையைத் தீர்க்க எடுத்திருக்கும் முன் முயற்சிகளை வரவேற்பதுடன் இதற்கு எம்மாலான ஒத்துழைப்பையும் வழங்கத் தயாராக இருக்கிறோம்.

— என்றும் மருத்துவ மாணவர் ஒன்றியத்தின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## மொத்தம் 11 மாணவர் இப்போது உண்ணாவிரதம்

யாழ் பல்கலைக்கழக மருத்துவபீட மாணவர்களின் உண்ணாவிரதம் நேற்று நான்காவது நாளாகவும் தொடர்ந்து நடைபெற்றது.

இதுவரை உண்ணாவிரதம் இருந்து வந்த ஆறு மாணவர்களுடன் நேற்று மேலும் ஐந்து மாணவர்கள் சேர்ந்து கொண்டனர்.

வட இலங்கை மருத்துவக் கல்லூரி மாணவர்களை, யாழ் மருத்துவ பீடத்தில் சேர்ப்பதற்கு எடுக்கப்பட்ட முடிவை எதிர்த்தே இந்த உண்ணாவிரதம் நடைபெற்று வருகிறது.

இதற்கிடையே யாழ்.மருத்துவ மாணவர் ஒன்றியம் தனது மூன்று கோரிக்கைகளை மீண்டும் இறுக்கமாக வலியுறுத்தும் கடிதம் ஒன்றை பல்கலைக்கழக துணை வேந்தர் பேராசிரியர் கே. குணரத்தினத்திடம் நேற்றுக் கையளித்தது. (அ-4-)

## புலிகளின் தாக்குதல்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

னர் சிறந்த முறையில் போராடியுள்ளனர்.

★ கேள்வி:- இராணுவத்தின் மனநிலை மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது என்று நாம் கேள்விப்படுகின்றோம். இது பற்றி நீங்கள் என்ன கூறுகிறீர்கள்?

★ ஜெரி:- எங்களுக்கு சில முட்டுக்கட்டைகள் இருந்துள்ளன. ஆனால் பத்திரிகைகளிலும், ஏனைய தொடர்பு சாதனங்களிலும் வெளியிடப்பட்டதற்கு மாறாக துருப்பினரின் மனநிலை மிகவும் உற்சாகமாகவே இருக்கிறது.

களத்தில் உள்ள தளபதிகளுடன் தொலைபேசி மூலமோ, இராணுவத் தொடர்பு சாதனம் மூலமோ நான் தொடர்பு வைத்துக் கொண்டே இருக்கிறேன். இன்று [நேற்று] காலை கூட படைத் தளபதி ஒருவருடன் நான் தொடர்பு கொண்டபோது வீரர்களின் மனநிலை நல்ல நிலையில் உள்ளது என்று அவர் கூறினார்.

எமது முகாம்கள் சுற்றிவளைக்கப்பட்டுள்ளன எனவும் அவற்றின் மீது தாக்குதல்கள் தவிர்க்க முடியாதவை என்றும் கடந்த சில நாட்களாக தப்பான பிரசாரங்கள் நடத்தப்பட்டு வருகின்றன. எமது படைகள் எந்த ஒரு சவாலையும் எதிர்கொள்ளத் தயாராக இருக்கின்றன. விடுதலைப் புலிகள் பிரேதப் பெட்டிகளை வைத்துள்ளார்கள் என்று கூட அறிக்கைகள் வெளியாகின. உண்மையில் நாங்கள் அவர்களின் சடலங்களை பிரேதப் பெட்டிகளில் வைத்து அனுப்பிவைப்போம்.

★ கேள்வி:- கடுமையாகக் காயமடைந்த படையினரை முகாம்களில் இருந்து ஆஸ்பத்திரிகளுக்கு அனுப்புவதில் பிரச்சினை இருந்து வருவதாகக் கேள்விப்படுகிறோம். அது உண்மையா?

★ ஜெரி:- போக்குவரத்தைப் பொறுத்தவரை பூநகரி, ஆனையிறவு, முல்லைத்தீவு. மன்னார் ஏன் இன்று பலாலி கூட தனிமைப்படுத்தப்பட்ட முகாம்களாகவே இருந்து வருகின்றன. பலாலியைப் பொறுத்தவரை அங்கேயே ஒரு ஆதார வைத்தியசாலையும் சில வசதிகளும் எமக்கு உண்டு. ஆனால் பூநகரி, முல்லைத்தீவு, ஆனையிறவு, வெற்றிலைக்கேணி ஆகிய முகாம்களைப்பொறுத்தவரை காயமடைந்த படையினரை அங்கிருந்து எடுத்து வருவது விமான மார்க்கமாக அல்லது கடல் மார்க்கமாகவே சாத்தியமாகும். தற்போதும் இவர்களை எடுத்துவர முடியுமென்று விமானப்படை, கடற்படைத் தளபதிகள் உறுதி கூறியுள்ளனர்.

பூநகரி முகாமில் காயமடைந்திருந்த சில சிப்பாய்களை விமானப்படையினர் அனுராதபுரம் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் சென்றனர். காயமடைந்தவர்களை சிகிச்சைக்கு எடுத்துச்செல்வது ஒரு பிரச்சினையாக இருந்தபோதிலும், தற்போது அதற்குத் தீர்வு காணப்பட்டு விட்டது.

★ கேள்வி:- வடக்கில் உள்ள முகாம்களில் கடும் உணவுத் தட்டுப்பாடு நிலவுவதாக அண்மையில் பல தகவல்கள் வெளியாகினவே .......

★ ஜெரி:- முகாம்களில் தட்டுப்பாடு எதுவும் நிலவவில்லை. ஆனால் உடன் பொருள்களை அங்கு அனுப்பி வைப்பதில் சில தடங்கல்கள் எதிர் நோக்கப்பட்டன. ஆயினும் உலர் உணவுப் பொருள்களைப் பொறுத்தவரை எல்லா முகாம்களிலும் இரண்டு மாதங்களுக்கு போதுமான பொருள்கள் கையிருப்பில் இருப்பதாக பாதுகாப்பு அமைச்சு அண்மையில் தெரிவித்திருந்தது.

படையினர் வழமையான சேவைகளை ஆரம்பித்துள்ளனர். கடற்படையினரும் பொருள்களை வடக்கே அனுப்ப உதவி வருகிறார்கள். எனவே இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு கண்டுவிட முடியும் என நான் நம்புகிறேன்.

★ கேள்வி:- பலாலி, பூநகரி படைமுகாம்களில் உள்ள படையினரை சரணடையுமாறு விடுதலைப்புலிகள் அறிவித்துள்ளனர் என்று பேசப்படுகிறது அதில் உண்மை ஏதாவது இருக்கின்றதா?

★ ஜெரி:- இரண்டாவது விமானம் ஏவுகணைத் தாக்குதலுக்கு இலக்கான பின்னர் கடந்த 10 நாட்களாக இத்தகைய செய்தி ஒன்று பரவிவருகிறது. நானும் இது குறித்து விசாரிப்பதற்காக எனது தளபதிகளுடன் தொடர்பு கொண்டு பேசினேன். அத்தகைய நிலைமை எதுவும் கிடையாது என்று அவர்கள் மறுக்கின்றனர்.

குறிப்பிட்ட சில பகுதியினர் நிலைமையைச் சாதகமாக்கிக் கொண்டு இத்தகைய கதைகளைப் பரப்பி விடுகிறார்கள். அது விடுதலைப் புலிகளாகவும் இருக்கலாம்.

★ கேள்வி:- இலங்கை இராணுவம் தொண்டர் படைக்கு ஆட்களைச் சேர்த்து வருகிறது அதில் பலர் சேர்ந்து கொள்கின்றனரா?

★ ஜெரி:- பெருந்தொகையானோர் சேருகிறார்கள். எதிர்பார்க்கப்பட்டதிலும் பார்க்க நல்ல பலன் கிடைத்துள்ளது. இன்றைய நிலைமையைத் தெரிந்து கொண்டு இராணுவத்தில் சேர மக்கள் அக்கறை காட்டமாட்டார்கள் என நாம் நினைத்தது பொய்த்துவிட்டது. ஒரு பௌத்த பிக்கு கூட போராடுவதற்கு முன் வந்ததை இங்கு குறிப்பிடலாம்.

★ கேள்வி:- வடக்கு கிழக்கு நிலைமையை உடனுக்குடன் மக்களுக்குத் தெரிவிக்க செய்தியாளர்கள் விரும்புகின்றனர். அப்படிச் செய்வதில் ஏதாவது கேடு உண்டா?

★ ஜெரி:- உண்மை வெளியிடப்படுமானால் அது எந்த விதத்திலும் கேடு விளைவிக்கும் என நான் கூறமாட்டேன். ஆனால் உண்மை அவர்களது சொந்தக் கருத்துடன் கலக்கப்பட்டு வெளியிடப்படுகிறது.

இராணுவ நடவடிக்கைகள் தொடர்பாக விரிவான செய்திகளை வழங்குவதற்காக தற்போது பாதுகாப்பு அமைச்சின் கீழ் தொடர்புச் சாதன பிரிவு ஒன்றை அமைத்துள்ளோம். இந்தப் பிரிவு பொய்ப் பிரசாரங்களைத் தடுப்பதற்கு உதவும்.

★ கேள்வி:- பிரிவினைவாதிகளைத் தவிர வடமாகாணம் உட்பட இலங்கை முழுவதுமே சமாதானத்தை விரும்புகிறது. இலங்கை இராணுவத்தின் தளபதி என்ற முறையில் சமாதானத்தை விரும்பும் அனைவருக்கும் இந்தச் சந்தர்ப்பத்தில் விசேட செய்தி எதனையும் தெரிவிக்க விரும்புகிறீர்களா?

★ ஜெரி:- ஆம், தற்போதைய நிலைமை குறித்து வெளியான பொய்த் தகவல்களையும், தவறான பிரசாரங்களையும் நம்பவேண்டாம் என்று கேட்டுக்கொள்கின்றேன். இந்நேரத்தில் பாதுகாப்புப் படைகள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை மக்கள் உணர்ந்து அவர்களுக்குப் பூரண ஒத்துழைப்பையும், பிரார்த்தனையையும் வழங்குவார்களானால் படையினர் மிகுந்த உற்சாகத்துடன் போரிடுவார்கள் என்பதே எனது நம்பிக்கை. [ஐ]

## 15க்கும் மேற்பட்ட...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பட்டனர்.

கொக்கட்டிச் சோலைத் தாக்குதலின்போது 2 ஆம் லெப்டினன்ட் வேலவன் என அழைக்கப்படும் மட்டக்களப்பைச் சேர்ந்த சபாநாயகம் அருளம்பலம் என்ற போராளி வீரச்சாவைத் தழுவினார். (இ-5-4)

## விமானப்படையின..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அந்த நாட்களில் எமக்குத் தேவையான ரக விமானங்கள் உண்டா, எமது பொருளாதார நிலைக்கு அவை ஒத்து வருமா, அப்படி அவற்றை கொள்வனவு செய்தாலும் அவற்றை இங்கு கொண்டு வர மூன்று மாத காலம் எடுக்கும் அதுவரை பாரிய இராணுவ நடவடிக்கைகளை மேற்கொள்ளாது தினமும் படை வீரர்களை இழந்து கொண்டிருக்க முடியுமா போன்ற பிரச்சினைகளையும் எதிர்நோக்க வேண்டியுள்ளது

பயணிகள் விமானத்தை தாக்கியதைப் போன்று யுத்த விமானங்களை ஏவுகணை மூலம் இலகுவில் தாக்க முடியாது. அது விமான ஓட்டியின் திறமையைப் பொறுத்தது

கிழக்கு மாகாணத்தைப் பொறுத்தவரை உரிய திட்டங்களுடன் படையினரை உரிய முறையில் வழிநடத்தினால் விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகளை கிழக்கில் ஒழித்துக்கட்ட முடியும்.

—இவ்வாறு அந்த இராணுவ ஆய்வாளர் மேலும் தெரிவித்தார். (ஐ)

## ஆசிரியர் சம்பள உயர்வு இம்மாதம் கிடைக்கும்

கொழும்பு, மே. 14

அரசாங்க ஆசிரியர்கள் தமது சம்பள உயர்வை இம்மாதம் முதல் பெற உள்ளனர் என்று நேற்று அறிவிக்கப்பட்டது.

ஜனவரி மாத முதலான சம்பள உயர்வை நிலுவையுடன் வழங்குவதற்கான நடவடிக்கைகளை கல்வி உயர்கல்வி அமைச்சு எடுத்துள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

இதற்கென 280 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

ஒரு லட்சத்து 9 ஆயிரம் ஆசிரியர்கள் இந்த அதிகரித்த சம்பளத்தை பெற உள்ளனர். (ஒ-5)

## விளையாட்டு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம் ஜொலிஸ்ரார்ஸ் விளையாட்டுக்கழகம் ஈ. எஸ். பேரம்பலம் சக நிறுவனத்தின் ஆதரவுடன் ஜொலிஸ்ரார்ஸ் கிண்ணத்துக்காக நடத்தும் மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்கள் கிரிக்கெட் ஆட்டத்தில் இன்று யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகள் வருமாறு:-

★ காலை 8.30 மணி முதல்:- ஓல்ட் கோல்ட்ஸ் வி. க. எதிர் கொக்குவில் ஸி. ஸி. ஸி. "பி" அணி.

★ பிற்பகல் 1.30 மணி முதல்:- ஜொனியன்ஸ் வி. க. எதிர் ஜொலிஸ்ரார் வி. க. புளூஸ். [உ]

## இறுதி போட்டியும் பரிசளிப்பும்

யாழ். மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக் குழுவால் நடத்தப்படும் மாவட்ட ரீதியாக 115 கழகங்கள் பங்குபற்றிய உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டியும், பரிசளிப்பு நிகழ்வும் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட மைதானத்தில் நடைபெறவுள்ளன.

இந்நிகழ்வில் வடக்கு-கிழக்கு மாகாண விளையாட்டுத்துறைப் பணிப்பாளர் திரு. சுந்தரம்திவகலாலா பிரதம விருந்தினராகவும் தமிழீழ விடுதலைப்புலிகளின் யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் திரு.சி. இளம்பரிதி விசேட விருந்தினராகவும், யாழ் மாவட்ட உதைபந்தாட்டச் சபைத்தலைவர் திரு. சி தியாகராஜா சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொள்வார்கள்.

இன்றைய இறுதிப் போட்டியில் மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து காங்கேசன்துறை யங் றோயல் விளையாட்டுக் கழகம் ஆடவுள்ளது. (இ)

## வீரச்சாவு

யாழ்ப்பாணம், மே 14

நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை யாழ். மாவட்டத்தில் ஏற்பட்ட நேரடி மோதலில் வீரச்சாவைத் தழுவிக்கொண்ட வீரவேங்கை.சாந்தகுமார் [சந்திரன் ராஜு, தென்மூலை, அச்சுவேலி மேற்கு], அவர்களின் வித்துடல் இன்று ஞாயிறு காலை 9.00 மணிக்கு அவரது இல்லத்திலிருந்து அணிவகுப்பு மரியாதைகளுடன் எடுத்துச் செல்லப்பட்டு அச்சுவேலிச் சந்தை மைதானத்தில் மக்களின் இறுதி வணக்கத்திற்காக வைக்கப்பட்டிருக்கும்.

இறுதி வணக்கக் கூட்டம் நிறைவுற மீண்டும் அங்கிருந்து அணிவகுப்பு மரியாதைகளுடன் வடமராட்சி மாவீரர் துயிலும் இல்லத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டு அங்கு இறுதி இராணுவ மரியாதைகளுடன் புனித விதை குழியில் விதைக்கப்படும். [இ]

★ ★ ★

யாழ்ப்பாணம், மே. 14

கடந்த 12 ஆம் திகதி வளலாய்ப் பகுதியில் ஏற்பட்ட இராணுவத்துடனான நேரடி மோதலில் வீரச்சாவடைந்த வீரவேங்கை நெப்போலியன் — சசி பரணபாஸ் றொபட், தாளையடி அவர்களின் வித்துடல் இன்று ஞாயிறு காலை 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் இருந்து அணிவகுப்பு மரியாதைகளுடன் எடுத்துச்செல்லப்பட்டு தாளையடி றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலையில் மக்கள் அஞ்சலிக்கு வைக்கப்பட்டு அஞ்சலிக் கூட்டம் இடம் பெறும்.

அஞ்சலிக்கூட்டம் நிறைவுற வடமராட்சி மாவீரர் துயிலும் இல்லத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு வித்துடல் புனித விதை குழியில் விதைக்கப்படும், (இ)

## ★ பாராட்டுகின்றோம் ★

யாழ். இந்துக் கல்லூரியில் A/L 1988 பிரிவில் எம்முடன் கல்வி பயின்ற நண்பன்

### ம. பாலகைலாசநாதசர்மா
அவர்கள்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் சிறப்புக் கலைமாணி (சமஸ்கிருதம்) தேர்வில் முதலாம் வகுப்பில் (First Class) சித்தியடைந்தமைக்காக பலகோடி பாராட்டுதல்களைத் தெரிவிக்கின்றோம்.

இவர் நபினை, சுதுமலை சிவஸ்ரீ ஜ. மகேஸ்வரக் குருக்கள், சீதாலக்ஷ்மி அம்மா தம்பதியினரின் கனிஷ்ட புத்திரர். இவர் தற்போது சமஸ்கிருதத்துறையில் தற்காலிக விரிவுரையாளராகவும் கடமையாற்றுகின்றார்.

இவர் கல்வி வானில் இன்னும் பிரகாசிக்க இறைவனை வேண்டி பாராட்டுகின்றோம்.

யாழ். இந்துக் கல்லூரி
மாணவ நண்பர்கள்.

[36627]


## மருந்து விற்பனையாளர் தேவை

மருந்து விற்பனையாளர் உடன் தேவை. விருப்பம் உள்ளோர் 18 ஆம் திகதிக்கு முன்னர் கல்வி மற்றும் இதர விவரங்களுடன் மாலை 2—4 இடையில் வரவும். தகுதி அனுபவம் என்பவற்றுக்கேற்ப சம்பளம் வழங்கப்படும்.

மயூரா மருந்தகம்
திருநெல்வேலி சந்தி
(36643)

இன்று 14-05-1995 ஞாயிறு இரவு 9மணிக்கு
வல்வை அம்மன் கோவில் வீதியில்
★ கலைக் காவிய நாயகர்கள் ★
வல்வை ஹெலியன்ஸ் நண்பர்களின்
41ஆவது தயாரிப்பு
காவியத் தலைவன்
(டிராமாஸ்கோப்)
[மன்னார்-பனங்காமத்தினை ஆண்ட மன்னன் கயிலை வன்னியனின் வரலாறு]
நாடக ஆக்கம்: ச. காந்திதாசன்
நெறியாள்கை ச. காந்திதாசன்
வெ. முத்துச்சாமி
(சி-1214)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிரைவேட்) லிமிடெட் ... இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 14 05 - 1995 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org